அட்டவணை 06 ஆனது 2014 இல் அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் செய்யப்பட்ட பங்களிப்பு மற்றும் அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பனவற்றுடன் கடந்த நான்கு ஆண்டுகளில் அதன் போக்குகளையும் காட்டுகின்றது. வரைபு 04 ஆனது இத்தகைய பங்களிப்புக்களையும் விபரிக்கின்றது. 2015 இல் மொத்த அரசாங்க வருமானமானது ரூபா 1,454,878 மில்லியனுக்கு (நிதி திட்டமிடல் அமைச்சின் வருடாந்த அறிக்கை – 2015) அதிகரித்துள்ளதுடன், மொத்த அரசாங்க வருமானத்திலிருந்தான 38.52% பங்களிப்பினையும் பதிவு செய்துள்ளது.


உள்நாட்டு மொத்த உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானமானது தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வந்துள்ளதுடன், 2015 இல் 5.01% வீதத்தினைக் காட்டியுள்ளது. வரி ஊக்குவிப்புக்கள், விடுமுறைகள், விலக்களிப்புக்கள் மற்றும் சலுகை அடிப்படையிலான வரி வீதங்களின் அறிமுகமானது விகிதாசார வீழ்ச்சிப் போக்கிற்கு காரணமாக அமையலாம்.

| அட்டவணை 06 – அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரியின் பங்களிப்பும் பாரிய பொருளாதார நடவடிக்கைகளின் நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியும் | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆண்டு | அரசாங்க வருமானம் ரூபா மில்.* | உ.இ.தி. சேகரிப்பு ரூபா மில். | அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரியின் சேகரிப்பு % | பாரிய பொருளாதார நடவடிக்கைகளின் நடைமுறை விலைகளில் மொ.உ.உற்பத்தியும் ரூபா மில்.** | மொ.உ.உ. உள்நாட்டு இறைவரியின் சேகரிப்பு விகிதாசாரம் |
| 2011 | 967,862 | 443,830 | 45.86% | 6,544,009 | 6.78% |
| 2012 | 1,051,461 | 443,456 | 42.18% | 7,582,376 | 5.85% |
| 2013 | 1,137,447 | 492,539 | 43.30% | 8,674,230 | 5.68% |
| 2014 | 1,195,206 | 514,161 | 43.02% | 9,784,672 | 5.25% |
| 2015 | 1,454,878 | 560,422 | 38.52% | 11,183,220 | 5.01% |

மூலம்: - * நிதி திட்டமிடல் அமைச்சு (ஆண்டறிக்கை) ** இலங்கை மத்திய வங்கி (ஆண்டறிக்கை)

**வரைபு 04**

**அரசாங்க வருமானத்திற்கு உள்நாட்டு இறைவரியின் பங்களிப்பும்**




## 2.8 வரி விபரத்திரட்டு இணக்கப்பாடு

வரி செலுத்துனர்கள் சுய மதிப்பீட்டின் அடிப்படையில் உரிய நேரத்தில் வரி விபரத்திரட்டுக்களை நிரப்பி வரி செலுத்துவதனை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித் திட்டமானது, குறித்த ஆண்டிலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது. சிறப்புரிமை அட்டைகளை (தங்கம் மற்றும் வெள்ளி) பரிசளித்தல், மோட்டார் வாகனங்களின் இறக்குமதி மீது வரிச் சலுகைகளை வழங்குதல், முன்கூட்டிய வரிக் கொடுப்பனவுகள் மீது கழிவுகள் வழங்குதல் போன்ற சுய இணக்கப்பாட்டினை விரிவாக்கும் நோக்குடன் தனிநபர் வரி செலுத்துனர்களுக்கு பயனளிக்கும் வகையிலான செயற்பாடுகள் தொடர்ந்தும் வினைத்திறனுடன் முன்னெடுக்கப்பட்டன.

அதற்கிணங்க, 2014/2015 வரி மதிப்பாண்டு காலப்பகுதியில் உரிய திகதியிலுள்ள நிறுவனமல்லா வருமான வரி விபரத்திரட்டுக்களை கோவைப்படுத்தும் வீதாசாரமானது 47% ஆக இருந்துள்ளதுடன், குறித்த காலப்பகுதியிலிருந்தான ஒரு மாத காலப்பகுதியினுள் இது 62% இற்கு அதிகரித்திருந்தது. உரிய திகதியிலிருந்து இரண்டு மாதங்களின் பின்னரான இணக்கப்பாட்டு வீத வரியானது நிறுவனத் துறையில் 72% இல் இருந்துள்ளது.

நிறுவன துறையினைப் பொறுத்தவரையில், உரிய திகதியில் 52% ஆக இருந்துள்ளதுடன், உரிய திகதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதியினுள் 58% ஆகவும் இருந்துள்ளது. நிறுவன வரி வீதமானது உரிய திகதியிலிருந்தான இரண்டு மாதங்களிலுள்ளான இணக்கப்பாட்டு வீத வரியானது 62% இல் இருந்துள்ளது.

அனைத்து வரிகளினதும் விபரத்திரட்டு இணக்கப்பாட்டு வீதமானது அநேகமாக நிலையானதாக இருந்த போதிலும், இது சுய மதிப்பீட்டு வரி முறைமையில் எதிர்பார்க்கப்படும் மட்டமல்ல. எவ்வாறாயினும், உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது விபரத்திரட்டு இணக்கப்பாட்டினை அடைவதற்கான நடவடிக்கைகளினை தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றது.

அட்டவணை 07 ஆனது உரிய திகதி மற்றும் 2010/2011 இலிருந்து 2014/2015 வரையிலான ஆண்டுகளில் செலுத்தப்பட வேண்டியிருந்த மாதத்திலிருந்து ஒரு மாத காலப்பகுதியிலுள்ள வருமான வரி விபரத்திரட்டு இணக்கப்பாட்டு வீதத்தினைக் காட்டுகின்றது.

| அட்டவணை 07– வருமான வரி விபரத்திரட்டு இணக்கப்பாடு 2010/2011 – 2014/2015 | | | |
|---|---|---|---|
| வரி மதிப்பீட்டாண்டு | துறை | முடிவுத் திகதி மீதான இணக்கப்பாடு | முடிவுத் திகதியிலிருந்து ஒரு மாத காலத்தினுள்ளான இணக்கப்பாடு |
| 2010/2011 | நிறுவனம் | 56% | 68% |
| | நிறுவனமல்லாத | 42% | 59% |
| 2011/2012 | நிறுவனம் | 56% | 60% |
| | நிறுவனமல்லாத | 39% | 48% |
| 2012/2013 | நிறுவனம் | 56% | 70% |
| | நிறுவனமல்லாத | 41% | 54% |
| 2013/2014 | நிறுவனம் | 53% | 61% |
| | நிறுவனமல்லாத | 42% | 57% |
| 2014/2015 | நிறுவனம் | 52% | 58% |
| | நிறுவனமல்லாத | 47% | 62% |

| அட்டவணை 08 – ஏனைய வரிகள் மீதான விபரத்திரட்டு இணக்கப்பாடு | | | | | |
|---|---|---|---|---|---|
| வருடம் | பெசேவ | பொசேக | தேகவ | உபொசெவ | |
| 2013 ஆண்டு | 78% | 93% | 77% | வரி மதிப்பீட்டாண்டு 2012/2013 | 53% |
| 2014 ஆண்டு | 49% | 71% | 84% | வரி மதிப்பீட்டாண்டு 2013/2014 | 55% |
| 2015 ஆண்டு | 65% | 68% | 86% | வரி மதிப்பீட்டாண்டு 2014/2015 | 63% |

## 2.9 வருமான வரி சேகரிப்பு

அதிஈட்ட வரி, தனிநபர் வருமான வரி, பங்கிலாப வரி மற்றும் வட்டி மீதான நிறுத்தி வைத்தல் வரி என்பன உள்ளடங்கலான நிறுவன வருமான வரியின் மொத்த வருமானம் என்பவற்றிலிருந்தான வருமான சேகரிப்பானது 2015 இல் ரூபா 256,435 மில்லியனுக்கு அதிகரித்திருந்தது. இது 2014 இல் சேகரிக்கப்பட்ட ரூபா 191,960 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 25.14% அதிகரிப்பாகும். மொத்த வருமான வரி சேகரிப்பானது குறித்த ஆண்டுக்கான ரூபா 246,100 மில்லியன் மதிப்பீட்டுக்கெதிராக ரூபா 10,435 மில்லியன் மிகையினைக் காட்டுகின்றதுடன், இது 2014 ஆம் ஆண்டில் 37.33% இனைக் கொண்டிருந்ததுடன், குறித்த ஆண்டுக்கான உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மொத்த வருமானத்தில் 45.76% இனைப் பிரதிபலிக்கின்றது.

### 2.9.1 வருமான வரி சேகரிப்பு – துறை ரீதியான வகுப்பாக்கம்

மொத்த வருமான வரி சேகரிப்புக்கான (ரூபா 256,435 மில்லியன்) நிறுவன துறையிலிருந்தான பங்களிப்பானது சேகரிக்கப்பட்ட மொத்த வருமான வரியில் ரூபா 155,871 மில்லியன் அல்லது 61% ஆகும். நிறுவனமல்லா துறையானது ரூபா 100,564 மில்லியனை அல்லது 39% பங்களிப்பினை வழங்கியுள்ளது. 2015 இல் நிறுவனத் துறையிலிருந்தான வருமான சேகரிப்பானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், ரூபா 63,843 மில்லியன் அல்லது 69.37% அதிகரிப்பினைக் காட்டுகின்றது. இதற்கு பிரதான காரணமாக ரூபா 49 மில்லியன் தொகையுடைய அதிஈட்ட வரி அறவீடு செய்யப்பட்டமையினைக் குறிப்பிடலாம். அதிஈட்ட வரியானது 2015 இடைக்கால வரவு செலவுத்திட்டத்தில் ஒரு வரியாக அறிமுகப்படுத்தப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இந்த வரியானது 2013/2014 வரி மதிப்பீட்டாண்டில் ரூபா இரண்டாயிரம் மில்லியனை விஞ்சுகின்ற புத்தக இலாபத்தினைக் கொண்டுள்ள ஏதேனும் கம்பனி அல்லது எவரேனும் தனிப்பட்ட நபரின் மீது மற்றும் (வருமான வரிக்கு முந்திய) 2013/2014 வரி மதிப்பீட்டாண்டுக்கு ரூபா இரண்டாயிரம் மில்லியனை விஞ்சுகின்ற அனைத்து துணைக் கம்பனிகள் மற்றும் பிடிப்புக் கம்பனிகளின் மொத்த புத்தக இலாபம் (வருமான வரிக்கு முந்திய) மீது விதிக்கப்பட்டது.

அட்டவணை 09 அதன் பொழிப்பினைக் காட்டுவதுடன் வரைபு 05 அது தொடர்பில் விபரிக்கின்றது.


| அட்டவணை 09 : - நிறுவனம் மற்றும் நிறுவனமல்லாத வருமான வரி சேகரிப்பு – 2014 & 2015 | | | | |
|---|---|---|---|---|
| | 2015 | | 2014 | |
| | வரி சேகரிப்பு (ரூபா) | % | வரி சேகரிப்பு (ரூபா) | % |
| **நிறுவனம் *** | 155,870,960,759 | 61% | 92,028,323,420.00 | 48% |
| **நிறுவனமல்லாத **** | 100,563,979,780 | 39% | 99,931,727,250.00 | 52% |
| **மொத்தம்** | **256,434,940,539** | **100%** | **191,960,050,670.00** | **100%** |

* 2014 இல் ரூபா 10,365 மில்லியன் மற்றும் 2015 இல் ரூபா 12,340 மில்லியன் பங்கிலாப வரியினை உள்ளடக்குகின்றது.

**உ.போ.செ.வரி(PAYE)திட்டத்தின் கீழ் ஊழியர்களினால் செலுத்தப்பட்ட வருமான வரி மற்றும் நிறுவன துறையினால் அளிக்கப்பட்ட வட்டி வருமான சேவைகள் மீது கழிப்பனவு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்ட நி.வை.வரியும் உள்ளடங்குகின்றது.

**வரைபு 05**

**நிறுவன மற்றும் நிறுவனமல்லா வருமான வரி சேகரிப்பு – 2014 & 2015**




### 2.9.2 மூலத்தின் அடிப்படையிலான வருமான வரி சேகரிப்பு பகுப்பாய்வு

அட்டவணை 10 ஆனது குறித்த ஆண்டு காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட மூலத்தின் அடிப்படையிலான வருமான வரி பகுப்பாய்வின் பொழிப்பினை (ஊழியம் மற்றும் ஏனையவை) காட்டுகின்றது.

| அட்டவணை 10 - வருமான வரி சேகரிப்பு - 2015 | | |
|---|---|---|
| **மூலம்** | **சேகரிப்பு (ரூபா மில்.)** | |
| **ஊழியம்** | | |
| உ.பொ.செ.வரி திட்டம் | 26,019.87 | |
| தவறுகையிலுள்ள வரிக்கான தண்டப்பணம் பற்றிய மதிப்பீடுகள் | 211.45 | **26,231.32** |
| **ஏனையவை** | | |
| சுய மதிப்பீடு மற்றும் தண்டப் பணம் பற்றிய மதிப்பீடுகள் | 150,887.98 | |
| ஆண்டுக் கட்டணங்கள், வேத்துரிமைக் கட்டணங்கள் அல்லது முகாமைத்துவக் கட்டணங்களின் கொடுப்பனவுகள் மீதான நிறுத்தி வைத்தல் வரி | 62,911.84 | |
| பிற மூலத்தின் கழிப்பனவு | 16,475.49 | |
| **மொத்த சேகரிப்பு** | | **256,506.63** |
| கழி: மீளளிப்பு | | -71.69 |
| **தேறிய சேகரிப்பு** | | **256,434.94** |

நிறுத்தி வைத்தல் வரி முறைமையினுள் உள்ளடங்காத வர்த்தகம், வியாபாரம், உயர் தொழில், வாழ்க்கைத் தொழில் மற்றும் ஏனைய சேவைகள் மீதான வரிகள் கொண்டிருக்கின்ற தண்டப் பணங்களினுடனான சுய மதிப்பீடுகள் மற்றும் மதிப்பீடுகளின் மூலமான தொகை ரூபா 150,888 ஆகும்.

### 2.9.3 வருமான வரியுடன் தொடர்புடைய பிரதான கொள்கை மாற்றங்கள்

குறித்த ஆண்டு காலப்பகுதியில் 2015 வரவு செலவு திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு வரி விதிப்பு முன்மொழிவுகளை நிறைவேற்றுவதற்கு உள்நாட்டு இறைவரிச் சட்டத்தில் பின்வரும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**விலக்களிப்புக்கள்**

i. ஏதேனும் வெளிநாட்டுப் பங்குப் பரிமாற்றத்தில் அமெரிக்க டொலர் வைப்புக்களில் அல்லது நிரல்படுத்தப்பட்ட அமெரிக்க டொலர் பிணைமுறிகளில் 2015 ஜனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளிலிருந்தான ஏதேனும் நம்பிக்கை அலகுகளுக்கு எழுகின்ற அல்லது சேருகின்ற இலாபங்கள் மற்றும் வருமானம்

ii. அத்தகைய IT/BPO கம்பனியின் ஆரம்பிக்குகையிலிருந்து 2 வருட காலப்பகுதிக்கு இலங்கையில் ஏதேனும் IT/BPO கம்பனியின் விதித்துரைக்கப்பட்ட தேவைப்பாடொன்றான வேத்துரிமைக் கட்டண வழி மூலமாக மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் கொடுப்பனவிலிருந்து இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் கம்பனி, பங்குடமை அல்லது ஆட்களின் அமைப்புக்கு எழுகின்ற அல்லது சேருகின்ற இலாபங்கள் அல்லது வருமானம்

iii. நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் வழங்கப்பட்ட ஏதேனும் நிறுவன கடன் முறியில் 2015 ஜனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் முதலீட்டிலிருந்து ஏதேனும் ஆளுக்கு சேருகின்ற அல்லது எழுகின்ற வட்டி அல்லது கழிவ

**சலுகை வரி வீதங்கள்**

i. உள்நாட்டுச் சந்தையில் தயாரிக்கப்பட்ட அத்தகைய பொருட்களின் விற்பனையிலிருந்தான இலாபங்கள் மற்றும் வருமானம் மீதான இறக்குமதிகளுடன் நிலையான போட்டியினைக் கொண்டதும், 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தயாரிப்பு வியாபாரத்தினை ஆரம்பித்துள்ள எவரேனும் தயாரிப்பாளரினால் செலுத்தத்தக்கதான வருமான வரியின் 10% கழிப்பனவு

ii. குறித்த சில ஊழிய வகையீடுகளுக்கு ஏற்புடையதான ஆகக் கூடிய 16% சலுகை வரி வீதமானது அவ்வாறான ஏனைய ஊழிய வகையீடுகளினை உள்ளடக்கும் வகையில் விரிவாக்கப்பட்டுள்ளது

iii. விவசாயத்துறைக்கு ஏற்புடையதான 12% சலுகை வரி வீதமானது உள்நாட்டு சீனி உற்பத்திக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது

iv. பிரிவு 59ஆ இல் குறித்துரைக்கப்பட்ட ரூபா 500 மில்லியன் வருடாந்தப் புரள்வு எல்லையானது ரூபா 750 மில்லியனுக்கு அதிகரிக்கப்பட்டது

v. அத்தகைய விருது பெறப்படுகின்ற ஆண்டிலிருந்து 5 ஆண்டு காலப்பகுதிக்கு விலக்களிப்புப் பெற்ற சர்வதேச திரைப்படம் / நாடக விழாவில் சினிமா அல்லது நாடகத்திற்கான வெற்றிப் பரிசினைப் பெறுகின்ற எவரேனும் நபரின் திரைப்படங்கள் அல்லது நாடகங்களிலிருந்தான இலாபங்கள் அல்லது வருமானத்தின் அரைவாசி.

**புதிய முதலீடுகளுக்கான வரிச் சலுகைகள்**

i. 2014.04.01 இற்கு முன்னதாக சட்டத்தின் 17அ பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ள புதிய வியாபாரங்களினால் வர்த்தக தொழிற்பாடுகளினை ஆரம்பிப்பதற்கும் முதலீடுகளினைப் பூர்த்தி செய்வதற்குமான கால எல்லையானது 2015.04.01 இற்கு முன்னதாக அவற்றின் முதலீடுகளினைப் பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போயிருந்தமையினால், 2016.04.01 இற்கு முன்னதான வர்த்தக தொழிற்பாடுகளின் ஆரம்பிக்குகையானது 2017.04.01 வரையில் நீடிக்கப்பட்டது.

ii. ஏற்றுமதி அல்லது விலக்களிப்புக்கான பொருட்களின் தயாரிப்பில் ஈடுபடுகின்ற அத்தகைய வியாபாரங்களாக இருக்குமிடத்து, பிரிவு 25 இன் ஏற்பாடுகளுடன் கோரத்தக்கதான தேய்மானக் கொடுப்பனவு மீதான ஏதேனும் நிலையான சொத்தின் கொள்ளல் மீது முன்னர் பதிவு செய்யப்பட்ட பெறுமானத் தேய்வு கொடுப்பனவு வழங்கப்பட்ட 2 மில்லியன் அ.டொலருக்குக் குறையாத முதலீட்டுடன் கூடிய ஏதேனும் புதிய வியாபாரமொன்று, புதிய வியாபாரமொன்றின் வர்த்தக தொழிற்பாடுகளின் ஆரம்பிக்குகையிலிருந்து 5 வருட காலப்பகுதிக்கு பங்கிலாபமாக கருதப்பட்டதிலிருந்து அல்லது அத்தகைய இலாபத்தில் விநியோகிக்கத்தக்க பங்கிலாபம் மீது வழங்கப்பட்டது.

iii. பொருட்களின் (மதுபானம் அல்லது புகையிலை தவிர்ந்தவை) தயாரிப்பு வியாபாரத்தினை கொண்டு நடாத்துகின்ற தொழில்முயற்சியொன்றிற்கான இலாபங்கள் மற்றும் வருமானங்கள் மீதான ஏற்புடைய வரி வீதமானது 5 வருட காலப்பகுதியொன்றுக்கு ரூபா 500 மில்லியனை விஞ்சாது ஆகக் கூடுதலாக 50% வரையில் குறைக்கப்பட்டது. பிரிவு 25 இன் ஏற்பாடுகளுக்கமைய, கோரத்தக்கதான பெறுமானத்தேய்வு கொடுப்பனவுடன் கூடிய ஏதேனும் நிலையான சொத்துக் கொள்ளலின் மூலம் 2015.04.01 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால், 2017.04.01 இற்கு முன்னதாக ரூபா 300 மில்லியனுக்குக் குறையாத முதலீட்டினைக் கொண்டு மேல் மாகாணம் தவிர்ந்த வேறு ஏதேனும் மாகாணத்தில் விரிவுபடுத்தப்படுகின்ற அத்தகைய தொழில்முயற்சியாயின் 28% வரிக்குப் பொறுப்புடையதாகும்.

iv. உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டவாறான விதித்துரைக்கப்பட்ட காலப்பகுதிக்குள் ஏதேனும் தயாரிப்பு வியாபாரத்தில் (மதுபானம் அல்லது புகையிலை தவிர்ந்த) ஈடுபடுவதற்கு ரூபா 500 மில்லியன் மிகையாக ஈடுபடுத்திய மூலதனத்துடன், 2015 டிசம்பர் 31 ஆம் திகதியன்று அல்லது அதன் முன்னர் வரி நோக்கங்களுக்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் பதிவு செய்து கொள்கின்ற ஏதேனும் கம்பனி, வர்த்தக தொழிற்பாடுகளின் ஆரம்பிக்குகையிலிருந்தான 7 வருட காலப்பகுதிக்குள் ஏற்புடைய வரி வீதத்தின் 50% கழிப்பனவுக்கு உரித்துடையதாகும்.

**செலவுகளைக் குறைத்தல்**

பயிலுனர்களுக்கு அளிக்கப்பட்ட தராதர திறன் விருத்தி பயிற்சியளித்தல் (உதாரணம் - NVQ மட்டம்) மூன்றாம் நிலை வாழ்க்கைத் தொழில் பயிற்சிக் கல்வி ஆணைக்குழுவில் (TVEC) பதிவு செய்துள்ள எவரேனும் ஆளுக்கு மும்மடங்கு கழிப்பனவு வழங்கப்பட்டது.

**வைப்புக்களிலிருந்தான முதலீட்டு வருமானம் மீதான நிறுத்தி வைத்தல் வரி**

i. தனிநபர்கள் மற்றும் தரும தாபனங்களுக்கு ஏற்புடையதான நிறுத்தி வைத்தல் வரி முறைமையானது 2.5% தனியான நிறுத்தி வைத்தல் வரியொன்றினை அறிமுகப்படுத்துவதன் மூலம் மீளாய்வு செய்யப்பட்டது.

ii. சிரேஷ்ட பிரஜைகளின் வட்டி வருமானத்தின் மீதான விலக்களிப்பானது வட்டி வருமானம் மீது ஏற்புடையதான தற்போதைய விலக்களிப்பு எல்லைக் குறுமட்டத்தினை நீக்குவதன் மூலம் விரிவாக்கப்பட்டது.

## 2.10 பெறுமதி சேர் வரி சேகரிப்பு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பெறுமதி சேர் வரி சேகரிப்பானது ரூபா 214,237 மில்லியனாக அமைந்திருந்ததுடன், குறித்த ஆண்டுக்கென மதிப்பீடு செய்யப்பட்ட தொகையான ரூபா 230,000 உடன் ஒப்பிடுகையில் ரூபா 15,763 மில்லியன் வீழ்ச்சியினைப் பதிவு செய்துள்ளது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 23,678 மில்லியன் அல்லது 11.05% வீழ்ச்சியினை குறிப்பிடுகின்றது. எவ்வாறாயினும், நிதிச் சேவைகள் மற்றும் ஏனைய சேவைகள் மீது சேகரிக்கப்பட்ட பெறுமதி சேர் வரியானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் அதிகரித்த நிலையில் காணப்பட்டது. நிதிச் சேவைகள் மற்றும் ஏனைய சேவைகள் மீது குறித்த ஆண்டு சேகரிக்கப்பட்ட மொத்தப் பெறுமதி சேர் வரியானது ரூபா 101,616 மில்லியனாக இருந்துள்ளதுடன், இந்தத் தொகையானது 2014 ஆம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 90,193 மில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 11,423 மில்லியன் அதிகமாகும். இதற்கு ஆண்டொன்றுக்கான வரி குறுமட்டமானது 12 மில்லியனிலிருந்து 15 மில்லியனுக்கு விரிவாக்கப்பட்டமையும், பெறுமதி சேர் வரி வீதமானது 12 சதவீதத்திலிருந்து 11 சதவீதத்திற்கு குறைவடைந்தமையும் காரணமாக அமையலாம்.


அட்டவணை II ஆனது 06 ஆம் வரைபில் சித்தரிக்கப்பட்டுள்ள பெறுமதி சேர் வரி மீளளிப்புக்கள் மற்றும் தேறிய சேகரிப்பு என்பவற்றின் துறை வாரியான மொத்தத்தினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 11 – பெறுமதி சேர் வரி மொத்த சேகரிப்பும் மீள் கொடுப்பனவுகளும்**

| துறை | 2014 தேறிய சேகரிப்பு (ரூபா மில்.) | | 2015 மொத்த சேகரிப்பு (ரூபா மில்.) | | மீளளிப்பு | தேறிய சேகரிப்பு (ரூபா மில்.) | |
|---|---|---|---|---|---|---|---|
| **உற்பத்தித் துறை** | | 45,441.70 | | 29,627.17 | 732.65 | | 28,894.52 |
| **உற்பத்தியல்லா துறை** | | | | | | | |
| -சேவைகள் | 65,752.67 | | 73,916.97 | | 197.46 | 73,719.51 | |
| -நிதியியற் சேவைகள் | 24,436.89 | | 27,896.35 | | | 27,896.35 | |
| -விருப்பு பெசேவ | 3.49 | 90,193.05 | 0.17 | 101,813.49 | | 0.17 | 101,616.03 |
| **இறக்குமதிகள்** | | 102,280.68 | | 83,727.80 | 1.37 | | 83,726.43 |
| **மொத்தம்** | | **237,915.43** | | **215,168.46** | **931.48** | | **214,236.98** |

**வரைபு 06**

**பெறுமதி சேர் வரி சேகரிப்பு - 2015**



| அட்டவணை 12 – மொ.உ.உற்பத்திக்கான பெ.சே.வரியின் பங்களிப்பு தொடர்பான துறை ரீதியான பகுப்பாய்வு | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| துறை | 2014 | | 2015 | | மொ.உ.உற்பத்தியில் பெசேவ சேகரிப்பின் சதவீதம் | |
| | தேறிய சேகரிப்பு (ரூபா) | % | தேறிய சேகரிப்பு (ரூபா) | % | 2014 | 2015 |
| உற்பத்தித் துறை | 45,441,698,904 | 19.10% | 28,894,521,159 | 13.49% | 0.46% | 0.26% |
| உற்பத்தியல்லா துறை | 90,193,048,803 | 37.91% | 101,616,031,540 | 47.43% | 0.92% | 0.91% |
| இறக்குமதிகள் மீதான | 102,280,685,200 | 42.99% | 83,726,432,785 | 39.08% | 1.05% | 0.75% |
| **மொத்தம்** | **237,915,432,907** | **100.00%** | **214,236,985,484** | **100.00%** | **2.43%** | **1.92%** |

### 2.10.1 பெறுமதி சேர் வரியின் கைத்தொழில் ரீதியான பகுப்பாய்வு

அட்டவணை 13 ஆனது வங்கியியல், காப்புறுதி, ஹோட்டல் மற்றும் உணவகம், நிர்மாணம், மின்சாரம் என்பவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்ட உள்நாட்டு பெறுமதி சேர் வரியினையும் மொத்த பெறுமதி சேர் வரி வருமானத்துக்கு அவை வழங்கிய பங்களிப்பினையும் காட்டுகின்றது.

| அட்டவணை 13 – பெ.சே.வரி உள்ளூர் மொத்தம் – உற்பத்தி மற்றும் சேவைகள் துறைகள் | | | | | |
|---|---|---|---|---|---|
| துறை | 2013 (ரூபா மில்.) | 2014 (ரூபா மில்.) | முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சி /அதிகரிப்பு % | 2015 (ரூபா மில்.) | முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சி /அதிகரிப்பு % |
| வங்கித்தொழில் | 15,921 | 18,822 | 18.22% | 23,089 | 22.67% |
| காப்புறுதி | 4,882 | 4,910 | 0.57% | 5,403 | 10.04% |
| ஹோட்டல் மற்றும் சுற்றுலா விடுதி | 5,672 | 6,507 | 14.72% | 7,429 | 14.17% |
| நிர்மாணம் | 5,293 | 6,943 | 31.17% | 6,605 | -4.87% |
| மின்சாரம் மற்றும் வாயு | 502 | 560 | 11.55% | 501 | -10.54% |
| இறக்குமதிகள் | 9,113 | 10,389 | 14.00% | 9,880 | -4.90% |
| நிதியளிப்பு | 11,860 | 13,982 | 17.89% | 18,487 | 32.22% |
| தொடர்பாடல் | 256 | 394 | 53.91% | 376 | -4.57% |
| பெற்றோலிய உற்பத்தி | 344 | 1,509 | 338.66% | 417 | -72.37% |
| குடிவகையும் மதுபானமும் | 9,747 | 9,930 | 1.88% | 396 | -96.01% |
| வகைப்படுத்தப்படாத சேவைகள் | 7,916 | 9,866 | 24.63% | 12,295 | 24.62% |
| வகைப்படுத்தப்படாத உற்பத்திகள் | 9,517 | 10,280 | 8.02% | 9,173 | -10.77% |
| ஏனையவை | 39,516 | 42,408 | 7.32% | 36,460 | -14.03% |
| **மொத்தம்** | **120,538** | **136,500** | **13.24%** | **130,511** | **-4.39%** |

## 2.10.2 பெறுமதி சேர் வரியுடன் தொடர்புடைய பிரதான கொள்கை மாற்றங்கள்

**வரி வீத குறைப்பு**

பெ.சே.வரியின் தற்போதைய வரி வீதம் 11% இற்கு (வரிப் பின்னம் 11/111) குறைக்கப்பட்டுள்ளது.

**பெறுமதி சேர் வரிப் பொறுப்புக்கான எல்லைக் குறுமட்டத்தினை விரிவாக்குதல்**

பதிவு செய்தலுக்குப் பொறுப்புடைய எல்லைக் குறுமட்டமானது 2015 ஜனவரி 01 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகும் ஏதேனும் காலாண்டுக்காக ரூபா 3 மில்லியனிலிருந்து ரூபா 3.75 மில்லியனுக்கு மேலும் விரிவாக்கப்பட்டுள்ளது.

**மொத்த விற்பனை மற்றும் சில்லறை வியாபாரம் மீதான பெறுமதி சேர் வரி**

மொத்த விற்பனை அல்லது சில்லறை வியாபாரமொன்றினை மேற்கொள்கின்ற எவரேனும் ஆளொருவர் அல்லது பங்குடமையொன்றின் ஏதேனும் கலண்டர் ஆண்டின் தொடர்ச்சியான மூன்று மாத காலப்பகுதிக்கான வழங்கல்களின் பெறுமதியின் பொறுப்பாகக் கூடிய எல்லைக் குறுமட்டமானது 2015 ஜனவரி 01 இலிருந்து அமுலுக்கு வரும் வகையில் ரூபா 250 மில்லியனிலிருந்து ரூபா 100 மில்லியனுக்கு குறைக்கப்பட்டுள்ளத.

**பிரிவு 3(1) இன் பந்தி (ஊ) இன் நோக்கங்களுக்கான மொத்த வழங்கல்கள்**

பிரிவு 3(1) இன் பந்தி (ஊ) இன் நோக்கங்களுக்கான எவரேனும் ஆள் அல்லது பங்குடமையின் மொத்த வழங்கல்கள் தொடர்பில்;

வழங்கல்களின் மொத்தப் பெறுமதியானது;

கம்பனியொன்றின் எவரேனும் பணிப்பாளர் அல்லது பங்குடமையொன்றின் பங்காளரின் ஏதேனும் வியாபாரம் உள்ளடங்கலாக, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட பதிவுகளின் கீழ் ஓரிடத்தில் அல்லது பல்வேறு இடங்களில் ஒத்த தன்மையினைக் கொண்ட ஏனைய வியாபாரத்தினை மேற்கொள்கையில் மொத்த விற்பனை அல்லது சில்லறை வியாபாரத்தில் ஈடுபடுகின்ற எவரேனும் ஆள் அல்லது பங்குடமை அத்தகைய மற்றைய வியாபாரத்தின் பணிப்பாளர் அல்லது பங்காளராவார்;

**கருதப்பட்ட பெறுமதி சேர் வரிக்கான பொறுப்பிற்கான விலக்களிப்புப் பெற்ற வழங்கலின் 25% இனைக் கணிப்பீடு செய்வதிலுள்ள புதிய தவிர்ப்புக்கள்**

விலக்களிப்புப் பெற்ற வழங்கலின் 25% இன் ஏதேனும் மிகையானது பிரிவு 3(1) இன் பந்தி (ஊ) இல் குறித்துரைக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட ஆளொருவரினைப் பொறுத்தவரையில், வரி விதிக்கத்தக்க வழங்கல்களாகவும் உள்ளடங்கிய அடிப்படையில் பெறுமதி சேர் வரிக்குப் பொறுப்புடையானதாயும் கருதப்படுதல் வேண்டும்.
விலக்களிப்புப் பெற்ற வழங்கலின் 25% எல்லைப்படுத்தலினைக் கணிப்பீடு செய்வதில் பின்வரும் விலக்களிப்புப் பெற்ற வழங்கல்கள் தவிர்க்கப்படுகின்றன. (இறக்குமதியாளரினால் மேற்கொள்ளப்படுகின்ற வழங்கலாயின், விசேட நுகர்வுப் பொருள் விதிப்பனவுக்குட்படக் கூடிய பூச்சிய வீதத்தினையுடைய பொருட்கள் மற்றும் பண்டங்கள் மீதான தவிர்ப்புக்கு மேலதிகமாக)-

- உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட புத்தம் புதிய பால் (2015 ஜனவரி 1 இலிருந்து பயனுறுதியாகும்)
- உள்நாட்டில் பயிரிடப்பட்ட பழங்களும் மரக்கறிகளும் அல்லது உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசி (2015 நவம்பர் 1 இலிருந்து பயனுறுதியாகும்)

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பெறுமதி சேர் வரிக்குப் பின்வரும் விலக்களிப்புக்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

**விலக்களிப்புக்கள்**

**(i) பின்வருவனவற்றின் வழங்கல்கள் அல்லது இறக்குமதி**

i. விவசாய உழவு இயந்திரங்கள் அல்லது அரை இழுவைப் பெட்டிகளுக்கான வீதி உழவு இயந்திரங்கள்

ii. அத்தகைய பொருட்களின் தயாரிப்பு மீது உற்பத்தி தீர்வைகள் கட்டளைச் சட்டத்தின் கீழான உற்பத்தி தீர்வை அல்லது சுங்கத் தீர்வை மற்றும் இறக்குமதி மீதான செஸ் வரிக்குப் பொறுப்பாகக் கூடிய துணைப் பொருளாக கருதப்பட்டு இறக்குமதி செய்யப்படும் அல்லது தயாரிக்கப்படும் மற்றும் வழங்கல் மேற்கொள்ளப்படும் எதைல் அல்கஹோல்.

**(ii) வழங்கல்**

i. 2014 ஒக்டோபர் 25 இற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கையின் மீள் அட்டவணைக்கான உடன்படிக்கையாக இல்லாது, 2014 ஒக்டோபர் 25 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட அத்தகைய உடன்படிக்கையின் காணி அல்லது கட்டிடம் தவிர்ந்த ஏதேனும் சொத்து மீதான நிதிக் குத்தகை உடன்படிக்கை அல்லது தொழிற்பாட்டு குத்தகை உடன்படிக்கையின் கீழ் குத்தகை வசதிகளின் ஏற்பாடு.

ii. பின்வரும் இறக்குமதிகள்

அ. பதப்படுத்தப்படாத மரக்குற்றிகள், கப்பல்கள் அல்லது பிரம்புகள் அல்லது

ஆ. விற்பனைக்கான முறை தவிர்ந்த, ஏதேனும் பதப்படுத்தலின்றி விற்பனை செய்யப்படுகின்ற அத்தகைய பொருட்களின் நிபந்தனைக்குட்பட்டு, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட பண்டங்கள் விதிப்பனவுச் சட்டத்தின் கீழ் விசேட பண்ட விதிப்பனவுக்குட்படும் ஏதேனும் பொருள்

iii. 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க தொலைத்தொடர்பு விதிப்பனவு சட்டத்தின் கீழ் தொலைத்தொடர்பு விதிப்பனவுக்குப் பொறுப்பாகும் தொலைத்தொடர்பு சேவைகள் மற்றும் சட்டத்தின் “தொலைத்தொடர்பு சேவைகள்” எனும் வரைவிலக்கணத்திலுள்ள அத்தகைய பொறுப்பிலிருந்து விசேடமாக விலக்களிக்கப்பட்ட சேவைகள் (2014 ஜனவரி 1 இலிருந்து பயனுறுதியாகும்)

iv. உள்ளூரில் தயாரிக்கப்பட்ட தேங்காய்ப்பால் (2015 நவம்பர் 1 இலிருந்து பயனுறுதியாகும்

**(iii) பின்வருவனவற்றின் இறக்குமதி**

i. கீழ்க்காணும் ரூபாய்களுக்கு மேற்பட்ட பெறுமதியினைக் கொண்ட வியாபாரத்துடன் தொடர்புடைய மாதிரிகள்

(அ) 2015 ஜனவரி 1 இற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட அத்தகைய இறக்குமதிகள் மீது இருபத்தி ஐந்தாயிரம் ; மற்றும்

(ஆ) சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் விதித்துரைக்கப்பட்டவாறான அத்தகைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, 2015 ஜனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னரான காலப்பகுதிக்காக இறக்குமதி செய்யப்பட்ட அத்தகைய இறக்குமதிகள் மீது ஐம்பதினாயிரம்

ii. இலங்கை துறைமுக அதிகாரசபையின் துறைமுகங்களுக்கென பிரத்தியேகமாக பயன்படுத்துவதற்கென இலங்கை துறைமுக அதிகாரசபையினால் இறக்குமதி செய்யப்படும் இயந்திரம், உபகரணம் அல்லது உதிரிப்பாகங்கள்

## 2.11 தேசக் கட்டுமான வரி சேகரிப்ப

குறித்த ஆண்டுக்கான தேசக் கட்டுமான வரி சேகரிப்பானது மொத்த வருமானத்திற்கு ரூபா 67,911 மில்லியனை பங்களிப்புச் செய்துள்ளது. இது 2014 இல் காணப்பட்ட ரூபா 65,354 உடன் ஒப்பிடும் போது கணிசமானளவு அதிகரிப்பினைக் காட்டுகின்றது. மொத்த தேசக் கட்டுமான வரி வருமானத்தில் ரூபா 23,972 மில்லியன் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டுள்ளது


அட்டவணை 14 – தேசக் கட்டுமான வரி சேகரிப்புப் பகுப்பாய்வு – 2015

| **துறை** | **தேறிய சேகரிப்பு (ரூபா)** | |
|---|---|---|
| | **2014** | **2015** |
| உற்பத்தி | 15,354,329,424 | 10,163,343,792 |
| சேவைகள் | 26,238,065,267 | 31,256,204,685 |
| இறக்குமதிகள் | 23,764,587,831 | 26,491,513,723 |
| **மொத்தம்** | **65,356,982,522** | **67,911,064,215** |

அட்டவணை 15 ஆனது 2014 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் தேசக் கட்டுமான வரி வருமான மதிப்பீட்டுடன் ஒப்பீடு செய்கின்றதுடன், 2015 ஆம் ஆண்டின் பின்னர் மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்ட வருமானத்தினையும் குறிப்பிடுகின்றது.

அட்டவணை 15 – தேசக் கட்டுமான வரி சேகரிப்பும் மதிப்பீடும்

| **ஆண்டு** | **வருமான மதிப்பீடு (ரூபா)** | **வருமான சேகரிப்பு (ரூபா)** | % |
|---|---|---|---|
| 2015 | 48,000,000,000 | 43,938,771,964 | 92% |
| 2014 | 45,600,000,000 | 44,583,121,715 | 98% |



## 2.11.1 தேசக் கட்டுமான வரியுடன் தொடர்புடைய பிரதான கொள்கை மாற்றங்கள்

**தேசக் கட்டுமான வரிக்குப் பொறுப்புடைய எல்லைக் குறுமட்டத்தினை விரிவாக்குதல்**

தேசக் கட்டுமான வரிக்குப் பொறுப்புடைய காலாண்டுப் புரள்வானது, 2015 ஜனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகும் ஏதேனும் காலாண்டுக்கு ரூபா 3 மில்லியனிலிருந்து ரூபா 3.75 மில்லியனுக்கு மேலும் விரிவாக்கப்படுகின்றது.

**விலக்களிக்கப்படும் பொருட்கள்**

(i) பின்வருவனவற்றிற்கு மேற்படாத வியாபாரத்துடன் தொடர்புடைய மாதிரிகளின் இறக்குமதி-

(அ) 2015 ஜனவரி 1 இற்கு முன்னதாக இறக்குமதி செய்யப்பட்ட அத்தகைய மாதிரிகளின் பெறுமதி ரூபா இருபத்து ஐந்தாயிரம், மற்றும்

(ஆ) சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் விதித்துரைக்கப்பட்டவாறான நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குட்பட்டு, 2015 ஜனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட அத்தகைய மாதிரிகளின் பெறுமதி ரூபா ஐம்பதினாயிரம்

(ii) இலங்கை துறைமுக அதிகாரசபையினால் அதன் துறைமுகத்தினுள் பிரத்தியேகமாக பயன்படுத்துவதற்கென இறக்குமதி செய்யப்படும் ஏதேனும் எந்திரத் தொகுதி, உபகரணம் அல்லது உதிரிப் பாகங்கள்

(iii) எடுத்தவரினால் அதன் மீள் உடமையினைப் பெற்ற பின்னர் கையுதிர்க்கப்படுகின்ற 2014 ஒக்டோபர் 25 ஆம் திகதிக்கு முன்னதாக செய்யப்பட்ட நிதிசார் குத்தகை உடன்படிக்கையின் கீழ் வழங்கப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனம் தவிர்ந்த, 2014 ஒக்டோபர் 25 ஆம் திகதிக்கு பின்னர் இறக்குமதி செய்யப்படின் அல்லது விற்பனை செய்யப்படின், அதன் இறக்குமதி அல்லது உற்பத்தி மீதான அதே தீர்வைக்கு வேறு வகையில் பொறுப்பாகவிருக்கும் 2014 ஒக்டோபர் 25 ஆம் திகதியன்று விற்கப்படாதுள்ள ஏதேனும் மோட்டார் வாகனம்.

(iv) 2014 ஒக்டோபர் 25 ஆம் திகதியின் பின்னர் இறக்குமதி செய்யப்படின் அல்லது உற்பத்தி செய்யப்படின், 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் உற்பத்தி தீர்வைக்கும், 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ், மேல் வரிக்குப் பொறுப்பானதும் சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட பண்டங்களின் விபரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்கள் என்பவற்றின் கீழ் இனங்காணப்பட்டனவுமான சிகரட்டுக்களின் இறக்குமதி அல்லது உற்பத்தி மீதான அதே தீர்வைக்குப் பொறுப்பாகவிருக்கின்ற 2014 ஒக்டோபர் 25 ஆம் திகதியில் விற்கப்படாதுள்ள சரக்குகளிலுள்ள சிகரட்டுக்கள் உட்பட அவற்றின் உற்பத்தி அல்லது இறக்குமதி மீதான தீர்வைக்குப் பொறுப்பான சிகரட்டுக்கள் அல்லது எண்ணிக்கை;

(v) 2014 ஒக்டோபர் 25 ஆந் திகதியின் பின்னர் தயாரிக்கப்பட்டிருப்பின், அதே சுங்கத் தீர்வைக்கு ஏற்புடையதாக அமையாததும், 2014 ஒக்டோபர் 25 ஆந் திகதியிலுள்ளவாறானதுமான விற்பனை செய்யப்படாதுள்ள இருப்புக்களில் உள்ள அவ்வாறு தயாரிக்கப்பட்ட மதுபானம் உள்ளடங்கலாக, தயாரிப்பாளரின் மீது மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 52) கீழ் மதுவரித் தீர்வை அல்லது இறக்குமதி மீது 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழான வரியும், 1966 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இறைவரி பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சுங்கத் தீர்வைக்கு ஏற்புடையதும் சுங்க நோக்கங்களுக்கான ஒத்திசைவாக்கப்பட்டதுமான பண்டங்களின் விபரணம் அல்லது குறியீட்டு முறைமை இலக்கங்கள் என்பவற்றின் கீழ் இனங்காணப்பட்டதுமான மதுபானம்.

**விலக்களிக்கப்பட்ட சேவைகள்**

(i) அசையக் கூடிய ஆதனங்களினை குத்தகைக்கு வழங்குதல்

(ii) தொலைத்தொடர்பு சேவைகள்


(iii) கட்டிடங்களினை நிருமாணித்து, அவற்றினை விற்பனை செய்கின்ற சொத்து வியாபாரம் மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகளினைப் பொறுத்தவரையில், அத்தகைய வதிவிட நிருமாண வசதியின் வழங்கலுடன் தொடர்புடைய நிருமாண கருத்திட்டத்தின் பெறுமதியானது பத்து மில்லியன் ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்கு குறைந்திருத்தல் அல்லது அதற்குச் சமமான வேறு ஏதேனும் நாணயங்களிலிருத்தல்.

## 2.12 பொருளாதார சேவைக் கட்டண சேகரிப்பு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட பொருளாதார சேவைக் கட்டணத்தின் திரட்டிய தொகையாக ரூபா 6,148 மில்லியன் சேகரிக்கப்பட்டதுடன், மொத்த வருமான சேகரிப்பில் அதன் பங்களிப்பு 1.10% ஆக இருந்துள்ளது. இது குறித்த ஆண்டுக்கான மதிப்பீட்டின் 95% ஆகும்.

**அட்டவணை 16 – பொருளாதார சேவைக் கட்டண சேகரிப்பு**

| ஆண்டு | வருமான மதிப்பீடு (ரூபா) | வருமான சேகரிப்பு (ரூபா) | % |
|---|---|---|---|
| 2015 | 6,500,000,000 | 6,148,447,689 | 95% |
| 2014 | 8,400,000,000 | 6,154,508,746 | 73% |




## 2.13 உழைக்கும் பொழுது செலுத்தும் வரி சேகரிப்பு

உழைக்கும் போது செலுத்தும் வரி சேகரிப்பு திட்டத்தின் கீழ் குறித்த ஆண்டு காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 26,206 மில்லியனாக இருந்துள்ளதுடன், 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 22,297 மில்லியனாக இருந்துள்ளது.

| அட்டவணை 17 - பகுப்பாய்வு வரியின் கீழ் உ.பொ.செ. வரி மற்றும் வருமான மட்டங்கள் | | | | |
|---|---|---|---|---|
| வருமான எல்லை ரூபா | | மொத்த உழைப்பூதியங்களின் கூட்டுத்தொகை ரூபா | ஊழியர்களின் எண்ணிக்கை | உ.பொ.செ.வரியின் கீழான வரி ரூபா |
| கீழ் 600,000 | கழிக்கப்படாத வரி | 278,639,706,728 | 1,179,759 | |
| | கழிக்கப்பட்ட வரி | 81,802,331,128 | 133,149 | 942,793,330 |
| 600,001-1,100,000 | | 129,737,471,313 | 161,488 | 1,321,674,263 |
| 1,100,001-1,600,000 | | 82,583,656,105 | 74,353 | 2,331,761,381 |
| 1,600,001-2,100,000 | | 43,827,545,985 | 25,094 | 2,179,786,834 |
| 2,100,001-2,600,000 | | 23,408,354,398 | 11,062 | 1,534,690,181 |
| 2,600,001-3,600,000 | | 21,416,665,961 | 7,374 | 2,023,828,753 |
| Above 3,600,000 | | 64,797,318,860 | 8,816 | 10,937,448,673 |
| | | 8,390,294,354 | 5,160 | 1,245,948,422 |
| **மொத்தம்** | | **734,603,344,831** | **1,606,255** | **22,517,931,837** |

## 2.14 நிறுத்தி வைத்தல் வரிகள் (வட்டி மற்றும் விதித்துரைக்கப்பட்ட கட்டணங்களின் மீது)

அரசாங்க பிணை முறிகள் (2014 இல் ரூபா 62,704,548,497/-) மற்றும் நிதி நிறுவனங்களிலிருந்தான மீதி மீது ரூபா 62,411,593,160/- தொகையினைக் கொண்டுள்ள வட்டி மீதான நிறுத்தி வைத்தல் வரியானது குறித்த ஆண்டு காலப்பகுதியில் ரூபா 53,397,715,864/- தொகையுடைய வருமானத்தினை பதிவு செய்துள்ளது. முன்னைய ஆண்டு சேகரிப்புடன் ஒப்பிடுகையில் இந்த வருட வட்டி மீதான நிறுத்தி வைத்தல் வரி வருமானமானது ரூபா 6,990 மில்லியனினால் அதிகரித்துள்ளது.


விரித்துரைக்கப்பட்ட கட்டணங்கள் மீதான நிறுத்தி வைத்தல் வரியாக ரூபா 492,472,221/- சேகரிக்கப்பட்டது. (2014 ஆம் ஆண்டில் ரூபா 214,338,440/-)

## 2.15 பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு தொடர்பான சேகரிப்பானது ரூபா 831,922,843/- ஆக இருந்துள்ளது. இது குறித்த ஆண்டுக்கென மதிப்பிடப்பட்ட தொகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,368,077,157/- இனால் வீழ்ச்சியடைந்துள்ளமையினைக் காட்டுகின்றது.

அட்டவணை 18 ஆனது 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு தொடர்பான வருமான மதிப்பீட்டினை ஒப்பீடு செய்கின்றது.

| அட்டவணை 18 – பந்தய மற்றும் சூதாட்ட அறவீடு சேகரிப்பு | | | |
|---|---|---|---|
| ஆண்டு | வருமான மதிப்பீடு (ரூபா) | வருமான சேகரிப்பு (ரூபா) | % |
| 2015 | 2,200,000,000 | 831,922,843 | 38% |
| 2014 | 1,500,000,000 | 815,175,141 | 54% |




## 2.16 நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதி அறவீடு சேகரிப்பு

2015 இல் நிருமாணக் கைத்தொழில் உத்தரவாத நிதி அறவீடு சேகரிப்பிலிருந்தான வருமானமானது ரூபா 753,314,770/- ஆகும். இந்த அறவீட்டுக்காக மொத்த பதிவு செய்யப்பட்ட வரி செலுத்துனர்களின் எண்ணிக்கை 334 ஆகும்.

அட்டவணை 19 ஆனது 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் நிருமாண கைத்தொழில் உத்தரவாத நிதி அறவீடு தொடர்பான வருமான மதிப்பீட்டினை ஒப்பீடு செய்கின்றது.

**அட்டவணை 19 – நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத நிதி அறவீடு சேகரிப்பும் மதிப்பீடுகளும்**

| ஆண்டு | வருமான மதிப்பீடு (ரூபா) | வருமான சேகரிப்பு (ரூபா) | % |
|---|---|---|---|
| 2015 | 1,200,000,000 | 753,314,770 | 63% |
| 2014 | 1,000,000,000 | 841,828,584 | 84% |

## 2.17 முத்திரைத் தீர்வை சேகரிப்பு

குறித்த ஆண்டு காலப்பகுதியில் முத்திரைத் தீர்வையிலிருந்து ரூபா 11,596 மில்லியன் வருமானமாகப் பெறப்பட்டது. 2011 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க மாகாண சபைகள் (முத்திரைத் தீர்வை மாற்றீடு) சட்டத்தின் நியதிகளின்படி முத்திரைத் தீர்வை மொத்த சேகரிப்பானது உரிய மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்டது. திணைக்களமானது முத்திரைத் தீர்வை இணக்கப்பாட்டினை விரிவாக்கும் நோக்குடன் மதியுரை மற்றும் மேற்பார்வை விஜயங்களை நடாத்தியதுடன், 2015 ஆம் ஆண்டில் 95 இடங்களுக்கு விஜயம் மேற்கொள்ளப்பட்டது. முத்திரைத் தீர்வை தொடர்பில் முறையாகப் பதிவு செய்யப்பட்ட ஒருங்கிணைந்த முகவர்களின் எண்ணிக்கையானது 8,393 ஆக (2015.09.30 இல் உள்ளவாறு) இருந்துள்ளதுடன், அவற்றுள் 8,227 அட்டவணைகளைச் சமர்ப்பித்துள்ளதுடன், இது 100% இணக்கப்பாட்டினை பதிவு செய்துள்ளது.

## 2.18 காணி மீதான மாற்று வரி

2013 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் கீழ் அமுல்படுத்தப்பட்ட காணி மீதான மாற்றீட்டு வரியிலிருந்தான ஆண்டுக்கான சேகரிப்பு ரூபா 1,067 மில்லியனாக இருந்துள்ளதுடன், இது குறித்த ஆண்டுக்கான மதிப்பீட்டின் 142.22% ஆகும்.

## 2.19 2011 இலிருந்து 2015 வரையிலான உள்நாட்டு இறைவரி சேகரிப்பு (வரி ரீதியாக)


அட்டவணை 20 ஆனது 2011 இலிருந்து 2015 வரையில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் வரி ரீதியான வருமான சேகரிப்பு பகுப்பாய்வினை பிரதிபலிக்கின்றது.

**அட்டவணை 20 :- உள்நாட்டு இறைவரி சேகரிப்பு 2011 - 2015 – வரி அடிப்படை பகுப்பாய்வு**

| வரி வகை | 2011 | | 2012 | | 2013 | | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சேகரிப்பு (ரூ.மில்) | % | சேகரிப்பு (ரூ.மில்) | % | சேகரிப்பு (ரூ.மில்) | % | சேகரிப்பு (ரூ.மில்) | % | சேகரிப்பு (ரூ.மில்) | % |
| வருமான வரி | 135,974 | 30.64 | 157,729 | 35.57 | 199,070 | 40.42 | 191,960 | 37.33 | 256,435 | 47.56 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 21,335 | 4.81 | 14,864 | 3.35 | 6,596 | 1.34 | 6,155 | 1.2 | 6,148 | 1.1 |
| பெறுமதிசேர் வரி | 215,420 | 48.54 | 204,656 | 46.15 | 217,687 | 44.2 | 237,915 | 46.27 | 214,237 | 38.23 |
| பற்று வரி | 4,232 | 0.95 | - | - | - | - | - | - | - | - |
| பந்தயம் மற்றும் சூதாட்ட அறவீடு | 286 | 0.06 | 289 | 0.07 | 592 | 0.12 | 815 | 0.16 | 832 | 0.15 |
| பங்கு கொடுக்கல் வாங்கல் அறவீடு | 3,264 | 0.74 | 1,285 | 0.29 | 1,197 | 0.24 | 2,048 | 0.4 | 1,395 | 0.25 |
| புரள்வு வரி | 131 | 0.03 | 138 | 0.03 | 218 | 0.04 | 472 | 0.09 | 16 | 0 |
| முத்திரைத் தீர்வை | 7,217 | 1.63 | 6,535 | 1.47 | 6,884 | 1.4 | 7,918 | 1.54 | 11,596 | 2.07 |
| பொருட்கள் சேவைகள் வரி | 25 | 0.01 | 12 | - | 16 | - | 3 | - | 0.88 | 0 |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 15 | - | 4 | - | 2 | - | 14 | - | 12 | 0 |
| நிர்மாணக் கைத்தொழில் உத்தரவாத அறவீடு | 1,106 | 0.25 | 710 | 0.16 | 751 | 0.15 | 842 | 0.16 | 753 | 0.13 |
| தேகவ | 53,501 | 12.05 | 57,106 | 12.88 | 59,397 | 12.06 | 65,354 | 12.71 | 67,911 | 12.12 |
| காணி வரி | - | - | - | - | 97 | 0.02 | 579 | 0.11 | 1,066 | 0.19 |
| சமூகப் பொறுப்பு அறவீடு | 1,324 | 0.3 | 127 | 0.03 | 32 | 0.01 | 85 | 0.02 | 20 | 0 |
| **மொத்த சேகரிப்பு** | **443,830** | **100.00** | **443,455** | **100.00** | **492,539** | **100.00** | **514,160** | **100.00** | **560,422** | **100.00** |

**வரைபு 10**

**உள்நாட்டு இறைவரி சேகரிப்பு 2011 - 2015 – வரி அடிப்படை பகுப்பாய்வு**



## மதிப்பீட்டுப் பிரிவுகளுக்கிடையில் பதவியணி, கோவைகள் மற்றும் வருமான பகிர்வு

| மதிப்பீட்டுப் பிரிவுகள் | பதவியணி | | | | | | | கோவைகள் | | | | | | | | வருமானம் (ரூபா மில்.) | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆணை. | பி.ஆ. | உ.ஆ. | சி.வ.அ. | வ.அ. | ஏனைய | மொத்தம் | வ/வ- நிவைவ | வதியாதோர் | பெசேவ/விருப்பு பெசேவ | தேகவ | உபொசெவ | பொசேக | பந்தய & சூ.அறவீடு ம.தீர்வை | அரச சார்பற்ற நிறுவனம் | வருமான வரி/ ச.பொ.அறவீடு | உபொசெவ | பொசேக | பெசேவ/பொசேவ/விருப்பு பெசேவ | தேகவ | வவ/பந்.&சூதாட்ட/ ஏனைய | ப.கொ.வா.வரி | மு.தீர்வை - காணி வரி | மொத்தம் |
| சர்வதேச பிரிவு (5B) | 2 | - | 16 | - | - | 21 | 39 | 84 | 1,754 | 100 | 30 | 114 | 21 | - | 186 | 7,152.24 | 634.37 | 93.81 | 491.17 | 54.62 | - | - | - | 8,426.21 |
| அலகு 1, 2 மற்றும் 3 | 2 | - | 20 | - | - | 14 | 36 | 4,231 | - | - | 9 | - | 20 | - | - | 964.91 | - | 0.13 | - | 2.92 | - | - | - | 967.95 |
| அலகு 4 | 1 | 1 | 9 | - | - | 11 | 22 | 989 | - | 754 | 603 | 718 | 91 | - | - | 1,102.75 | 314.95 | 110.73 | 1,572.16 | 741.05 | 0.06 | - | - | 3,841.71 |
| அலகு 5 | 1 | - | 10 | 1 | - | 12 | 24 | 861 | - | 705 | 560 | 701 | 50 | - | - | 1,432.81 | 547.15 | 123.26 | 1,654.02 | 582.42 | 18.64 | - | - | 4,358.30 |
| அலகு 12 (5A) | 1 | - | 15 | - | - | 10 | 26 | 872 | 7 | 859 | 439 | 752 | 752 | - | 1 | 1,507.92 | 448.99 | 154.75 | 1,719.11 | 571.71 | 0.00 | - | - | 4,402.48 |
| அலகு 14 | 1 | - | 15 | - | - | 15 | 31 | 2,876 | - | 529 | 381 | 244 | 16 | - | - | 378.65 | 83.56 | 34.35 | 912.18 | 351.86 | - | - | - | 1,760.60 |
| அலகு 15 | 1 | 1 | 13 | - | - | 13 | 28 | 1,792 | - | 642 | 458 | 311 | 34 | - | - | 473.92 | 54.19 | 51.81 | 663.42 | 231.27 | - | - | - | 1,474.61 |
| அலகு 4A | 1 | - | 13 | - | - | 11 | 25 | 2,201 | - | 616 | 531 | 459 | 26 | - | - | 761.81 | 142.29 | 49.44 | 724.34 | 345.19 | 0.04 | - | - | 2,023.11 |
| அலகு 5C | 1 | 1 | 14 | - | - | 11 | 27 | 3,469 | - | 630 | 413 | 862 | 18 | - | - | 740.33 | 140.24 | 56.21 | 682.23 | 301.20 | 0.41 | - | - | 1,920.62 |
| அலகு 5D | 1 | 1 | 13 | 3 | - | 11 | 29 | 2,960 | - | 457 | 316 | 952 | 39 | - | - | 669.04 | 119.24 | 36.87 | 484.14 | 213.20 | 4.82 | - | - | 1,527.32 |
| அலகு 17 | 1 | 1 | 14 | 2 | - | 13 | 31 | 6,210 | - | 860 | 651 | 605 | 66 | - | - | 701.04 | 402.50 | 104.79 | 3,095.58 | 838.99 | 0.00 | - | - | 5,142.91 |
| அலகு 4B | 1 | - | 14 | - | - | 10 | 25 | 2,211 | - | 489 | 306 | 427 | 98 | - | - | 403.46 | 118.44 | 52.15 | 1,071.91 | 312.62 | - | - | - | 1,958.58 |
| அலகு 13 | 1 | - | 19 | - | - | 10 | 30 | 4,357 | - | 1,443 | 1,769 | 906 | 627 | - | - | 608.59 | 102.32 | 59.81 | 1,283.84 | 577.93 | 0.02 | - | - | 2,632.49 |
| அலகு 5E | 1 | - | 14 | - | - | 11 | 26 | 3,356 | - | 624 | 407 | 918 | 158 | - | - | 518.38 | 201.50 | 91.48 | 638.49 | 324.23 | 0.01 | - | - | 1,774.10 |
| அலகு 5F | 1 | - | 13 | - | - | 9 | 23 | 2,057 | - | 484 | 295 | 1,046 | 275 | - | - | 346.34 | 183.83 | 58.53 | 552.32 | 231.26 | - | - | - | 1,372.28 |
| அலகு 16 | 1 | - | 17 | - | - | 10 | 28 | 2,929 | - | 724 | 781 | 474 | 324 | - | - | 559.86 | 95.61 | 87.11 | 1,266.54 | 577.52 | 6.09 | - | - | 2,592.73 |
| அலகு 18 | 1 | - | 17 | - | - | 8 | 26 | 5,602 | - | 870 | 479 | 741 | 40 | - | - | 1,319.87 | 549.91 | 89.31 | 1,766.75 | 785.96 | - | - | - | 4,511.81 |
| அலகு 6A | 2 | 1 | 13 | - | - | 16 | 32 | 404 | - | 399 | 389 | 338 | 63 | - | - | 13,427.39 | 2,040.13 | 541.82 | 11,879.40 | 5,685.74 | 0.00 | - | - | 33,574.47 |
| அலகு 7A | 2 | 2 | 11 | 1 | - | 18 | 34 | 470 | 3 | 407 | 396 | 418 | 295 | - | - | 18,374.90 | 5,019.27 | 1,187.55 | 18,229.18 | 4,751.26 | 0.11 | - | - | 47,562.26 |
| அலகு 7B | 2 | 1 | 12 | - | 1 | 15 | 31 | 438 | - | 389 | 358 | 365 | 43 | - | - | 12,946.82 | 2,106.23 | 522.04 | 10,922.28 | 2,817.43 | 0.02 | - | - | 29,314.82 |
| அலகு 8 | 2 | - | 12 | - | - | 15 | 29 | 431 | 8 | 443 | 352 | 400 | 431 | - | - | 24,767.71 | 3,137.44 | 867.49 | 9,808.03 | 2,639.36 | 0.00 | - | - | 41,220.02 |
| அலகு 6C | 2 | 2 | 16 | - | - | 23 | 43 | 316 | 6 | 377 | 353 | 198 | 102 | - | - | 51,494.00 | 4,472.01 | 309.08 | 42,925.09 | 6,799.68 | 0.02 | - | - | 105,999.87 |
| அலகு 10 | 2 | 2 | 16 | - | - | 16 | 36 | 659 | - | 428 | 365 | 463 | 376 | - | - | 11,202.73 | 2,867.01 | 1,020.96 | 13,901.69 | 4,285.89 | 3.82 | - | - | 33,282.11 |
| வட்டி மீதான நிவைவரி | 1 | - | 11 | - | - | 7 | 19 | 3,424 | - | - | - | - | - | - | - | 63,457.56 | - | - | - | - | - | - | - | 63,457.56 |
| உ.பொ.செ.வரி பிரிவு | 1 | - | 9 | - | - | 10 | 20 | - | - | - | - | 1,337 | - | - | - | 2,334.56 | 90.13 | - | - | - | - | 1,558.87 | - | 3,983.56 |
| பந்தய மற்றும் சூதாட்ட வரி | 1 | - | 4 | - | - | 5 | 10 | - | - | - | - | - | - | 627 | - | - | - | - | - | - | 831.92 | - | - | 831.92 |
| பெ.சே.வரி | 2 | - | 17 | - | - | 18 | 37 | - | - | 2,696 | - | - | - | - | - | - | - | - | 5,260.95 | - | - | - | - | 5,260.95 |
| முத்திரைத் தீர்வை | 1 | 1 | 16 | - | - | 13 | 31 | - | - | - | - | - | - | 8,393 | - | - | - | - | - | - | 0.09 | - | 12,625.22 | 12,625.31 |
| கொழும்பு தெற்கு | 1 | 1 | 19 | - | - | 17 | 38 | 8,050 | - | - | 345 | - | 8 | - | - | 1,203.84 | - | 6.95 | - | 185.98 | - | - | - | 1,396.77 |
| கொழும்பு மத்திய | 1 | 2 | 16 | - | - | 12 | 31 | 7,175 | - | - | 895 | - | - | - | - | 959.38 | - | 18.68 | - | 519.26 | 0.73 | - | - | 1,498.04 |
| கொழும்பு நகரம் | 1 | 1 | 21 | - | - | 20 | 43 | 7,589 | - | - | 1,222 | - | - | - | - | 776.58 | - | 5.83 | - | 550.59 | - | - | - | 1,333.01 |
| மஹரகம கிழக்கு | 1 | - | 25 | - | - | 12 | 38 | 9,854 | - | - | 797 | - | - | - | - | 411.11 | - | 3.56 | - | 348.50 | - | - | - | 763.16 |
| மஹரகம மேற்கு | 1 | - | 22 | - | - | 13 | 36 | 9,818 | - | - | 720 | - | 2 | - | - | 569.31 | - | 5.85 | 0.17 | 252.75 | 1.89 | - | - | 829.96 |
| பதுளை | 1 | - | 13 | - | - | 18 | 32 | 5,198 | - | - | 412 | - | - | - | - | 264.87 | - | 3.72 | - | 213.56 | - | - | - | 482.16 |
| காலி | 1 | - | 25 | - | - | 16 | 42 | 7,249 | - | - | 531 | - | 4 | - | - | 256.49 | - | 10.36 | - | 213.37 | - | - | - | 480.23 |
| களுத்துறை | 1 | - | 21 | - | - | 23 | 45 | 8,543 | - | - | 493 | - | - | - | - | 229.47 | - | 1.44 | - | 192.16 | - | - | - | 423.07 |
| மாத்தறை | 1 | - | 21 | - | - | 25 | 47 | 8,707 | - | - | 522 | - | - | - | - | 292.04 | - | 7.22 | - | 250.03 | - | - | - | 549.29 |
| நுவரெலியா | 1 | - | 16 | - | - | 15 | 32 | 4,078 | - | - | 362 | - | - | - | 9 | 174.73 | - | 0.62 | - | 153.75 | - | - | - | 329.10 |
| இரத்தினபுரி | 1 | - | 11 | - | - | 13 | 25 | 6,817 | - | - | 572 | - | 4 | - | - | 291.94 | - | 11.91 | - | 239.29 | - | - | - | 543.13 |
| அநுராதபுரம் | 1 | - | 20 | - | - | 18 | 39 | 4,373 | - | - | 390 | - | - | - | - | 314.36 | - | 5.24 | - | 188.59 | - | - | - | 508.18 |
| கம்பஹா | 1 | - | 21 | - | - | 13 | 35 | 11,792 | - | - | 884 | - | 2 | - | - | 508.75 | - | 12.12 | - | 514.82 | - | - | - | 1,035.69 |
| மட்டக்களப்பு | 1 | - | 11 | - | - | 15 | 27 | 4,458 | - | - | 315 | - | - | - | - | 140.64 | - | 2.09 | - | 125.07 | - | - | - | 267.80 |
| யாழ்ப்பாணம் | 1 | - | 2 | - | - | 17 | 20 | 2,307 | - | - | 396 | - | - | - | - | 99.16 | - | 1.24 | - | 140.76 | - | - | - | 241.17 |
| கண்டி | 1 | 1 | 38 | - | - | 22 | 62 | 9,500 | - | - | 578 | - | 1 | - | - | 616.54 | - | 6.00 | - | 339.25 | - | - | - | 961.79 |
| கேகாலை | 1 | 2 | 14 | - | - | 22 | 39 | 4,427 | - | - | 246 | - | - | - | - | 177.45 | - | 0.26 | - | 120.73 | - | - | - | 298.44 |
| குருநாகல் | 1 | - | 32 | - | - | 20 | 53 | 9,307 | - | - | 432 | - | - | - | - | 406.03 | - | 8.23 | - | 306.46 | - | - | - | 720.72 |
| தம்புள்ளை | 1 | 1 | 25 | - | - | 15 | 42 | 4,719 | - | - | 424 | - | 38 | - | - | 206.59 | - | 0.79 | - | 197.48 | - | - | - | 404.86 |
| நீர்கொழும்பு | 1 | 1 | 21 | | | 15 | 38 | 9,867 | - | - | 679 | - | - | - | - | 423.18 | - | 3.39 | - | 315.88 | - | - | - | 742.45 |
| **மொத்தம்** | **57** | **23** | **777** | **7** | **1** | **697** | **1,562** | **197,027** | **1,778** | **15,925** | **21,856** | **13,749** | **4,024** | **9,020** | **196** | **225,970.03** | **23,871.29** | **5,818.99** | **131,505.02** | **39,391.59** | **868.68** | **1,558.87** | **12,625.22** | **441,609.69** |

| | |
|---|---|
| **பெசேவ (இறக்குமதி)** | **83,603.09** |
| **தேகவ (இறக்குமதி)** | **26,469.27** |
| **திறைசேரி மாற்றல்கள்** | **7,853.11** |
| **மீளளிப்புகள்** | **(1,003.17)** |
| **செம்மையாக்கல்கள், வகைப்படுத்தப்படாத வருமானம், செலுத்தப்படாத காசோலைகள் மற்றும் ஏனையவை** | **1,890.37** |
| **தேறிய சேகரிப்பு (மாகாண சபைகளுக்கு மாற்றப்பட்ட முத்திரைத் தீர்வை மற்றும் தே.க.வரி 1/3)** | **560,422.36** |

# அத்தியாயம் 3

# செலவினம் மற்றும் உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரம்

குறித்த ஆண்டு காலப்பகுதியில் திணைக்களத்தின் மொத்த செலவினமானது ரூபா 4,437 மில்லியனாக இருந்துள்ளதுடன், இது முன்னைய ஆண்டுத் தொகையான ரூபா 3,088 மில்லியனுடன் ஒப்பிடுகையில், 43.69% அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ளது. மொத்த செலவினத்தில் 54.73% அல்லது ரூபா 2,428 மில்லியனானது மீண்டுவரும் செலவினத்திற்காக செலவிடப்பட்டது. 2014 இல் இச் செலவினமானது ரூபா 2,002 மில்லியனாக இருந்துள்ளது. வேதனாதிகள் மீதான செலவினமானது 26.14% இனால் அதிகரித்துள்ளதுடன், இது 2014 இல் ரூபா 1,413 மில்லியனாக இருந்துள்ளது. இது மொத்தச் செலவினத்தின் 40.19% இனையும் மீண்டுவரும் செலவினத்தில் 73.44% இனையும் கொண்டிருந்ததுடன், தனியொரு வகையீட்டுக்கான மிகப் பெரிய தொகையினையும் கொண்டிருந்தது.


குறித்த ஆண்டு காலப்பகுதியில், மூலதனச் செலவினமானது 85.04% அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ளதுடன், இது 2014 ஆம் ஆண்டில் ரூபா 2,009 மில்லியனையும் அடையப் பெற்றிருந்தது. திணைக்களத்தின் மொத்த செலவினத்தில் மூலதன செலவினமானது, 45.27% இனைப் பிரதிபலிக்கின்றது.

2013 வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளில் முன்மொழியப்பட்டவாறு, திணைக்களமானது திணைக்களத்தின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்குடன் வருமான நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமையின் அமுலாக்கலுக்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளினை எடுத்துள்ளதுடன், இக்கருத்திட்டத்திற்காக குறித்த ஆண்டு காலப்பகுதியில் ரூபா 1,518 மில்லியன் முதலீடு செய்யப்பட்டுள்ளது.


## 3.1 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் ஏற்பட்ட மொத்த செலவினத்தின் ஒப்பீடு

அட்டவணை 21:- மொத்த செலவினம் – 2013, 2014 மற்றும் 2015

| விபரம் | 2013 (ரூ.'000) | % | 2014 (ரூ.'000) | % | 2015 (ரூ.'000) | % |
|---|---|---|---|---|---|---|
| **மீண்டெழும் செலவினம்** | | | | | | |
| வேதனாதிகள் | 1,272,722 | 67.85% | 1,413,734 | 45.78% | 1,783,351 | 40.19% |
| பிரயாணச் செலவுகள் | 19,124 | 1.02% | 17,722 | 0.57% | 22,337 | 0.50% |
| வழங்கல்கள் | 67,269 | 3.59% | 103,684 | 3.36% | 86,449 | 1.95% |
| பராமரிப்பு | 30,999 | 1.65% | 63,671 | 2.06% | 47,768 | 1.08% |
| ஒப்பந்த சேவைகள் | 265,284 | 14.14% | 372,162 | 12.05% | 453,239 | 10.21% |
| இடமாற்றல்கள் | 27,871 | 1.49% | 31,438 | 1.02% | 35,268 | 0.79% |
| **உப மொத்தம்** | **1,683,269** | **89.73%** | **2,002,411** | **64.85%** | **2,428,412** | **54.73%** |
| **மூலதனச் செலவினம்** | | | | | | |
| புனரமைப்பும் மேம்பாடும் | 131,414 | 7.01% | 101,614 | 3.29% | 73,624 | 1.66% |
| மூலதன ஆதனங்கள் சுவீகாரம் | 40,243 | 2.15% | 49,343 | 1.60% | 31,820 | 0.72% |
| திறன் கட்டியெழுப்புதல் | 20,963 | 1.12% | 127,793 | 4.14% | 385,170 | 8.68% |
| முதலீடு (RAMIS கருத்திட்டம்) | | | 806,802 | 26.13% | 1,518,108 | 34.21% |
| **உப மொத்தம்** | **192,620** | **10.27%** | **1,085,552** | **35.15%** | **2,008,722** | **45.27%** |
| **மொத்தம்** | **1,875,889** | **100%** | **3,087,963** | **100%** | **4,437,134** | **100%** |




வரைபு 11
மொத்த செலவினம் – 2013, 2014 மற்றும் 2015




வரைபு 12
மீண்டுவரும் செலவினத்தின் பகுப்பாய்வு – 2015

## 3.2 உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரம்

2015 இல் திணைக்களத்தின் மொத்த செலவினமானது, ரூபா 4,436,933,990/- ஆக இருந்துள்ளதுடன், சேகரிக்கப்பட்ட வருமானமானது ரூபா 560,422,362,100/- ஆக இருந்துள்ளது. ஆகையால், உற்பத்தி வினைத்திறன் விகிதாசாரமானது (அதாவது செலவினத்தின் ஒவ்வொரு ரூபாவுக்கும் சேகரிக்கப்பட்ட வருமானம்) 126:1 ஆகும். வேறு முறையில் கூறுவதாயின், ரூபா 100/- இற்கான சேகரிப்பு செலவானது 79 சதமாக இருந்துள்ளது. இறக்குமதிகள் மீதான பெறுமதி சேர் வரி மற்றும் தேசக் கட்டுமான வரி என்பன நீங்கலாக ரூபா 100/- இற்கான சேகரிப்பு செலவு 98 சதமாக இருந்துள்ளது. (முன்னைய ஆண்டில் இத்தொகைகள் முறையே 60 சதம் மற்றும் 79 சதமாக இருந்துள்ளது).

அட்டவணை 22 ஆனது 2013 இலிருந்து 2015 வரையிலான காலப்பகுதிக்குரிய வருமான சேகரிப்பு, மொத்த செலவினம் மற்றும் சேகரிப்புச் செலவு என்பவற்றின் வகையீட்டினை வழங்குகின்றது.

**அட்டவணை 22 - வருமான சேகரிப்பு,மொத்த செலவினம் மற்றும் சேகரிப்பு செலவு (ரூபா.மில்)**

| விபரணம் | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|
| **வருமான சேகரிப்பு** | | | |
| வருமான வரி | 199,070.03 | 191,960.5 | 256,434.94 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 6,595.60 | 6,154.51 | 6,148.45 |
| பெறுமதிசேர் வரி | 217,686.92 | 237,915.43 | 214,236.99 |
| தேசக் கட்டுமான வரி | 59,397.33 | 65,353.98 | 67,911.06 |
| பற்று வரி | (0.08) | - | - |
| பந்தய மற்றும் சூதாட்ட வரி | 591.87 | 815.18 | 831.92 |
| பங்கு கொடுக்கல்வாங்கல் வரி | 1,197.41 | 2,048.05 | 1,394.92 |
| புரள்வு வரி | 218.08 | 472.18 | 15.77 |
| முத்திரைத் தீர்வை | 6,884.39 | 7,918.14 | 11,595.88 |
| பொருட்கள் மற்றும் சேவைகள் வரி | 15.97 | 3.46 | 0.89 |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 2.15 | 13.77 | 11.63 |
| நிர்மாண கைத்தொழில் உத்தரவாத நிதிய அறவீடு | 750.91 | 841.83 | 753.31 |
| காணி வரி | 96.74 | 579.47 | 1,066.64 |
| சமூகப் பொறுப்புடமை அறவீடு | 32.11 | 84.66 | 19.96 |
| **மொத்த சேகரிப்பு** | **492,539.43** | **514,160.71** | **560,422.36** |
| **செலவினம்** | | | |
| **மீண்டுவரும் செலவினம்** | | | |
| வேதனாதிகள் | 1,272.72 | 1,413.73 | 1,783.35 |

| | | | |
|---|---|---|---|
| பிரயாணச் செலவுகள் | 19.12 | 17.72 | 22.34 |
| வழங்கல்களும் உபகரணங்களும் | 67.27 | 103.68 | 86.45 |
| பராமரிப்பும் திருத்தங்களும் | 31.00 | 63.67 | 47.77 |
| சேவைகள் | 265.28 | 372.16 | 453.24 |
| இடமாற்றல்கள் | 27.87 | 31.44 | 35.27 |
| ஏனையவை | | | |
| **மூலதன செலவினம்** | | | |
| புனரமைப்பும் மேம்பாடும் | 131.41 | 101.61 | 73.62 |
| கொள்ளல்கள் | 40.24 | 49.34 | 31.82 |
| திறன் கட்டியெழுப்புதல் | 20.96 | 127.79 | 385.17 |
| முதலீடு (RAMIS கருத்திட்டம்) | - | 806.8 | 1,518.11 |
| **மொத்த செலவினம்** | **1,875.89** | **3,087.94** | **4,437.14** |
| | | | |
| **100/- இற்கான சேகரிப்பு செலவு** | **0.38** | **0.6** | **0.79** |
| **பெசேவ மற்றும் தேகவ நீங்கலாக 100/- இற்கான சேகரிப்பு செலவு** | **0.5** | **0.79** | **0.98** |

## 3.3 உள்ளக கணக்காய்வு

அனைத்து கொடுப்பனவுகள், நாளாந்த வாகனம் பயணிக்கும் தூர அட்டவணைகள் (தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களினால் பேணப்படுபவை), கொடுப்பனவு தாள்கள், மதிப்பாய்வு சபையின் வருடாந்த அறிக்கைகள், இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் மத்திய வங்கிகளின் வங்கி கணக்கிணக்கம் போன்றவற்றினை ஆய்வு செய்தல் உள்ளடங்கலான கணக்காய்வுகள் உள்ளக கணக்காய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கும் மேலாக, மதிப்பிழந்த காசோலைகள் மீதான வரவேண்டிய தொகையினை அறவீடு செய்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து ஆய்வினை மேற்கொள்ளல், வருமான வரி மற்றும் பெறுமதி சேர் வரி தொடர்பான மீள் நிதியிடல்கள், கட்டுநிதி கணக்கு மற்றும் கட்டுநிதி காசுக் கணக்கினை செவ்வை பார்த்தல் என்பன உள்ளக கணக்காய்வு கிளையினால் நிறைவேற்றப்படும் ஏனைய பிரதான பணிகளாகும்.

# அத்தியாயம் 4

# தவறவிடப்பட்ட வரிகள்

## 4.1 தவறவிடப்பட்ட வரிகள்

அட்டவணை 23 ஆனது 2015.12.31 இலுள்ளவாறான தவறவிடப்பட்ட வரி தொகைகள், தண்டப் பணங்கள் மற்றும் சேகரிக்கத்தக்க தொகை என்பவற்றினைக் காட்டுகின்றது.

அட்டவணை 23 - 2015.12.31 இலுள்ளவாறான நிலுவையிலுள்ள வரிகளின் பகுப்பாய்வு

| வரி வகை | தவறவிடப்பட்ட மொத்த வரித் தொகை ரூபா | தண்டப்பணம் ரூபா | தண்டப்பணம் நீங்கலான பிணக்கு வரி (ரூபா) | பிணக்கு வரிகளுடன் தொடர்புடைய தண்டப்பணம் | சேகரிக்கத்தக்க வரி (ரூபா) | சேகரிக்கத்-தக்க தண்டப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|
| வருமான வரி | 85,525,191,768 | 47,992,967,193 | 70,724,051,005 | 43,187,961,891 | 14,801,140,763 | 4,805,005,302 |
| வருமான வரி மீதான மிகைக் கட்டணம் | 330,273,865 | 266,625,899 | 328,987,850 | 265,383,865 | 1,286,015 | 1,242,034 |
| வருமான வரி (வட்டி மீதான பிடித்து வைத்தல் வரி வட்டி) | 1,495,289,225 | 696,636,514 | 1,472,896,677 | 651,064,332 | 22,392,548 | 45,572,182 |
| பெறுமதி சேர் வரி | 49,378,761,998 | 35,248,527,728 | 44,218,320,939 | 31,014,577,120 | 5,160,441,059 | 4,233,950,608 |
| பெறுமதி சேர் வரி (நிதிச் சேவைகள்) | 7,356,520,901 | 4,394,871,900 | 7,304,890,192 | 4,371,304,138 | 51,630,709 | 23,567,762 |
| பொருளாதார சேவைக் கட்டணம் | 4,629,887,138 | 4,161,928,938 | 3,644,746,541 | 3,540,616,152 | 985,140,597 | 621,312,786 |
| தேசக் கட்டுமான வரி | 3,828,081,529 | 4,196,471,475 | 2,332,907,259 | 2,846,670,584 | 1,495,174,270 | 1,349,800,891 |
| முத்திரைத் தீர்வை | 9,732,724 | 3,773,302 | - | - | 9,732,724 | 3,773,302 |
| பற்று வரி | 2,215,581,368 | - | 2,215,581,368 | - | - | - |
| புரள்வு வரி | 2,611,068,311 | 1,205,171,114 | 2,436,857,570 | 1,205,171,114 | - | - |
| பொருட்கள் சேவைகள் வரி | 945,024,420 | 1,022,819,837 | 943,355,822 | 1,022,819,837 | - | - |
| தேசிய பாதுகாப்பு அறவீடு | 1,538,591,036 | 575,787,753 | 1,373,143,369 | 575,787,753 | - | - |
| தேச பாதுகாப்பு பங்களிப்பு | 22,443,029 | 4,811,953 | 16,087,126 | 4,811,953 | - | - |
| நலன் வரி | 851,542 | 455,551 | 851,542 | 455,551 | - | - |
| நன்கொடை வரி | 2,409 | 1,204 | 2,409 | 1,204 | - | - |
| சமூக பொறுப்பு அறவீடு | 1,980,457 | 151,434 | 1,969,992 | 146,995 | 10,465 | 4,439 |
| திரண்ட தண்டப்பணம் | - | 215,435,611 | - | 103,551,506 | - | 111,884,105 |
| மொத்தம் | **159,541,598,811** | **99,986,437,406** | **137,014,649,661** | **88,790,323,995** | **22,526,949,150** | **11,196,113,411** |

குறிப்பு:

i. தவறவிடப்பட்ட மொத்த வரிகள் உரிய வரிகளின் தற்போதைய திரண்ட மீதியினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. எவ்வாறாயினும், மேலே வகுப்பாக்கம் செய்யப்பட்டவாறான தவறவிடப்பட்ட வரிகள் முழுமையான நிலுவையாக இருக்கமாட்டாது.

ii. ஏதாவதொரு காரணத்திற்காக மதிப்பீடொன்று வழங்கப்படுகையில், நிலுவைகள் அல்லது தவறுதல்கள் ஏற்படுகின்றன. (வரி செலுத்துனர்கள் விபரத்திரட்டுக்களை சமர்ப்பிக்காமை, விபரத்திரட்டுக்களின் அடிப்படையில் வரிகள் செலுத்தப்படாமை, பிழையான விபரத்திரட்டுக்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் போன்றன சமர்ப்பிக்கப்படுதல்). உரிய திகதியில் கொடுப்பனவு செய்யாமைக்காக பொதுவாக 10% தண்டப் பணமும், வருமான வரியினைப் பொறுத்தமட்டில் வரியின் 50% இனை அடையும் வரையில் கொடுப்பனவு செலுத்தாமைக்கு ஒவ்வொரு மாதமும் மேலும் 2% விதிக்கப்படுவதுடன், பெறுமதி சேர் வரியினைப் பொறுத்தவரையில் ஆகக் கூடுதலாக 100% விதிக்கப்படும்.

iii. சில வரி மதிப்பீடுகளுக்கெதிராக வரி செலுத்துனர்கள் மேன்முறையீடு மேற்கொள்ளப்படுவதனைத் தொடர்ந்து வரி செலுத்துனரின் மேன்முறையீட்டு உரிமைகள் என்ற வகையில் இணக்கப்பாடுகள், சில விடயங்களில் உயர்ந்த மேன்முறையீட்டு மட்டங்களில் (வரி மேன்முறையீட்டு ஆணையாளர், மேன்முறையீட்டு நீதிமன்றம் போன்றவை) எட்டப்படுமிடத்து, அது தவறவிடப்பட்ட வரியாகக் கருதப்படுதல் வேண்டும். அந்த தவறவிடப்பட்ட வரித் தொகையானது பிணக்கிலுள்ள வரித் தொகையாக அல்லது வரி மீதான தண்டப் பணமாக வகுப்பாக்கம் செய்யப்படும். மேன்முறையீட்டினை இணக்கப்பாடு செய்யும் போது தண்டப் பணத்துடன் சேர்க்கப்பட்ட வரி மதிப்பீட்டுத் தொகையின் ஏதேனும் அதிகரிப்பு விடுவிப்புச் செய்யப்படும்.

## 4.2 தவறவிடப்பட்ட வரிகளைக் குறைப்பதற்கான திட்டங்கள்

அ. தவறவிடப்பட்ட வரிகளை அறவீடு செய்வதற்காக உரிய சட்டவாக்கங்களில் குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் படிமுறைகள் எடுக்கப்பட வேண்டியுள்ளன. அத்தகைய நடவடிக்கைகள், வரி மதிப்பீடுகளை வழங்குவதிலிருந்து தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட போதிலும் கணிசமானளவு தொகை தவறவிடப்பட்டிருந்தமையினைக் காண முடிந்துள்ளது.

ஆ. தவறவிடப்பட்ட வரி அறவீட்டுப் பிரிவானது, 2010 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தவறவிடப்பட்ட வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ளவாறான தவறவிடப்பட்ட வரிகள் தொடர்பான அறிக்கையினை தயாரித்துள்ளதுடன், (குறித்த சில சந்தர்ப்பங்களில், தவறவிடப்பட்ட வரிகளை அறவீடு செய்வதற்கான விடயங்களை துரிதப்படுத்துவதற்கும் ஒழுங்கமைப்பதற்காகவும் அதனுடன் தொடர்புடைய விடயங்களை இனங்காண்பதற்காகவும் அளிக்கப்படும் ஒரு சட்டம்) அதிகாரமளிக்கப்பட்ட பயனுறுதிவாய்ந்த அறவீட்டு நடவடிக்கைகள் சிறந்த பெறுபேறுகளுக்கு வழி வகுக்கின்றன.

## 4.3 வரி நிலுவைகளை 3% இல் பேணுதல்

2010 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தவறவிடப்பட்ட வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 12 ஆம் பிரிவின் நியதிகளின்படி சேர்ந்த தண்டப் பணம் நீங்கலாக, ஏதேனும் வரிகளின் கூட்டுத்தொகையினை உறுதிப்படுத்துவது ஆணையாளர் நாயகத்தின் கடமையாக இருத்தல் வேண்டும் அல்லது வரியின் மிகை அல்லது தவறவிடப்பட்ட வரியின் ஏதேனும் பகுதி இச்சட்டத்தின் அட்டவணையில் விதித்துரைக்கப்பட்ட ஏதேனும் சட்டவிதியின் கீழ் தவறவிடப்பட்ட வரியானது 2010 ஜனவரி 1 ஆம் திகதி ஆரம்பமாகும் அல்லது அதன் பின்னர் ஆரம்பமாகும் ஏதேனும் கலண்டர் வருடத்தின் இறுதியிலுள்ளவாறு குறித்த சட்டத்தின் கீழ் அறவிடப்பட்ட அல்லது விதிக்கப்பட்ட சட்டங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட மொத்த வரியில் மூன்று *சதவீதத்தினை* விஞ்சாதிருத்தல் வேண்டும்.

அதற்கமைவாக,

| | | |
|---|---|---|
| 2015.12.31 இலுள்ளவாறான தேறிய தவறவிடப்பட்ட வரி | - | ரூபா. 22,526,949,150 |
| <u>கழி</u> | | |
| 2014.12.31 இலுள்ளவாறான தேறிய தவறவிடப்பட்ட வரி | - | <u>ரூபா. 17,278,517,597</u> |
| 2015 இல் தவறவிடப்பட்ட வரியின் அதிகரிப்பு | - | ரூபா. 5,248,431,553 |
| | | |
| 2014.12.31 இல் முடிவடைந்த ஆண்டில் மொத்த வரி சேகரிப்பு | - | ரூபா. 485,387,055,372 |
| 2014 இல் மொத்த வரி சேகரிப்பின் 3% | - | ரூபா. 14,561,611,661 |

எனவே, 2010 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தவறவிடப்பட்ட வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் தேவைப்படுத்தப்பட்டவாறு, முன்னைய ஆண்டின் மொத்த வரி சேகரிப்பின் 3% இற்கு குறைவாக இருப்பதால், 2015 இல் தவறவிடப்பட்ட வரிகளில் தேறிய சேர்ப்பு எதுவும் இடம் பெறவில்லை.

# அத்தியாயம் 5

# கணக்காய்வுகள், மேலதிக வரி சேகரிப்பு, மீள் கொடுப்பனவுகள், அறவீட்டு நடவடிக்கைகள் மற்றும் மேன்முறையீடுகள்

## 5.1 கணக்காய்வுகள்

வியாபாரச் செயற்பாடுகள், உரிமையின் வகை மற்றும் வியாபாரத்தின் அளவு என்பவற்றின் நியதிகளின்படி வரி செலுத்துனர்களின் பரந்தளவிலான சாத்தியமான உள்ளடக்கத்திற்கு 2015 ஆண்டு காலப்பகுதியில் கணக்காய்வுகள் மற்றும் முதலீடுகள் என்பன பொறுப்பேற்கப்பட்டன. பாரியளவிலான வரி செலுத்துனர்கள் தொடர்பில் பங்கிலாபங்கள் செலுத்தப்பட்டுள்ள புலனாய்வு மூலவளங்களின் வினைத்திறன்வாய்ந்த பயன்பாடு கண்டறியப்பட்டுள்ளது. மீளாய்வு காலப்பகுதியில் இத்தகைய வகையீடு தொடர்பான தெரிவு செய்யும் நடைமுறை தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டமையினால், தீர்வையினை மீளளிப்பதில் கணிசமானளவு அதிகரிப்பு ஏற்பட்டது. அதற்கிணங்க, மேலதிக வரி சேகரிப்பில் திருப்திகரமான மட்டத்தினை அடைவதற்கான கணக்காய்வுத் தொழிற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், அவை அட்டவணை இல.24 இல் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை 24 – குறித்த ஆண்டின் போது கணக்காய்வுகள் மற்றும் மேலதிக வரி சேகரிப்பு பற்றிய விபரங்கள் (ரூபா '000)**

| | வருமான வரி | பெசேவ | பொசேக | உபொசெவ | தேகவ | ஏனைய | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| குறித்த ஆண்டின் போது மதிப்பிடப்பட்ட மேலதிக வரியின் மொத்தத் தொகை | 13,525,689 | 5,507,366 | 347,928 | 365,003 | 1,627,740 | 163,518 | 21,537,244 |
| குறித்த ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மேலதிக வரியின் மொத்தத் தொகை | 11,330,761 | 4,353,781 | 275,612 | 105,558 | 893,916 | 63,335 | 17,022,963 |
| 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை | **6,577** | | | | | | |
| 2015 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட கணக்காய்வுகளின் எண்ணிக்கை | **6,350** | | | | | | |

**அட்டவணை 25 – ஒருங்கிணைந்த மற்றும் ஏனைய அலகுகளினால் மேலதிக வரிகளின் பகுப்பாக்கம் (தண்டப்பணம் உள்ளடங்கலாக)**

| விபரம் | மேலதிக வருமானம்/புரள்வு மதிப்பீடும் உடன்பாடும் (ரூபா '000) | மேலதிக வரி மதிப்பீடும் உடன்பாடும் (ரூபா '000) | | | | சேகரிக்கப்-பட்ட மேலதிக வரி (ரூபா '000) (தீர்க்கப்பட்ட கோரிக்கை மீளளிப்பு உள்ளடங்கலாக) |
|---|---|---|---|---|---|---|
| | | ஒருங்கிணைந்த பாவபி | ஒருங்கிணைந்த பிற | பிற அலகுகள் | மொத்தம் | |
| வருமான வரி | 71,840,005 | 10,176,596 | 1,389,126 | 1,959,967 | 13,525,689 | 11,330,761 |
| பெ.சே.வரி | 24,292,676 | 1,293,388 | 1,389,247 | 2,824,731 | 5,507,366 | 4,353,781 |
| பொ.சே.க | 55,980,053 | 258,139 | 82,309 | 7,480 | 347,928 | 275,612 |
| உபொசெவ | 5,094,808 | 55,238 | 66,204 | 243,561 | 365,003 | 105,558 |
| தே.க.வரி | 66,972,450 | 621,656 | 436,090 | 569,994 | 1,627,740 | 893,916 |
| ஏனையவை | 1,244,775 | 106,124 | 48,114 | 9,280 | 163,518 | 63,335 |
| **மொத்தம்** | **225,424,767** | **12,511,141** | **3,411,090** | **5,615,013** | **21,537,244** | **17,022,963** |

## 5.2 மேன்முறையீடுகள்

குறித்த ஆண்டின் போது வழங்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு எதிராகப் பெறப்பட்ட மேன்முறையீடுகளில் 660 இனை பூர்த்தி செய்துள்ளதுடன், மேன்முறையீடுகளின் பகுப்பாய்வு நிலைமை பின்வருமாறு

| அட்டவணை 26 – பெறப்பட்டதும் தீர்க்கப்பட்டதுமான மேன்முறையீடுகளின் பகுப்பாய்வு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | வருமான வரி | பெசேவ | பொசேக | தேகவ | ஏனைய | மொத்தம் |
| **2015.01.01 அன்றுள்ளவாறு மீதி** | அலகுகள் **(மே.மு.2 இன்படி)** | 129 | 9 | 0 | 6 | 0 | 144 |
| | மேன்முறையீட்டு கிளை **(மே.மு.2 இன்படி)** | 130 | 193 | 4 | 127 | 3 | 457 |
| | உ.இ.ஆ.நா. விசாரணைகள் | 66 | 85 | 0 | 34 | 0 | 185 |
| **குறித்த ஆண்டின் போது பதிவு செய்யப்பட்டது (மே.மு.2 இன்படி)** | | **454** | **323** | **9** | **285** | **26** | **1097** |
| **பூரணப்படுத்தப் பட்டது** | தீர்க்கப்பட்டவை (உ.இ.ஆ.நா) | 33 | 46 | 0 | 21 | 0 | 100 |
| | அலகுகள் (மே.மு.4) | 184 | 8 | 0 | 36 | 0 | 225 |
| | மேன்முறையீட்டு கிளை | 121 | 100 | 5 | 101 | 8 | 335 |
| **உ.இ.ஆ.நா.விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்டவை** | | **139** | **2111** | **1** | **117** | **2** | **470** |
| **2015.12.31 அன்றுள்ளவாறு மீதி** | அலகுகள் **(மே.மு.2 இன்படி)** | 91 | 0 | 0 | 70 | 2 | 163 |
| | *மேன்முறையீட்டுக் கிளை **(மே.மு.2 இன்படி)** | 178 | 209 | 7 | 94 | 17 | 505 |
| | உ.இ.ஆ.நா. விசாரணைகள் | 172 | 250 | 1 | 130 | 2 | 555 |
| ***குறித்த ஆண்டின் போது மேன்முறையீட்டுக் கிளைக்கு கிடைக்கப் பெற்ற கோவைகள்** | | **143** | **189** | **4** | **100** | **11** | **447** |

## 5.3 பெறுமதி சேர் வரிக்குப் பின்னரான மீள் கொடுப்பனவு கணக்காய்வுகள்

திணைக்களத்தின் விசேட கணக்காய்வு கிளையானது வரி விதிக்கத்தக்க காலப் பகுதியில் பெறுமதி சேர் வரி மீள் நிதியிடல் கணக்காய்வுக்குப் பின்னரான 216 வழக்குகளை (தொடரப்பட்டவை) பூர்த்தி செய்துள்ளதுடன், இதன் மூலம் ரூபா 399,505,866/- மேலதிக வரியாக சேகரிக்கப்பட்டது.

## 5.4 அறவீட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அட்டவணையானது குறித்த ஆண்டு காலப்பகுதியில் வரிகளை அறவிடுவதற்காக தொடரப்பட்ட வழக்குகள் மற்றும் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் எண்ணிக்கையைக் காட்டுகின்றது.

| அட்டவணை 27 – அறவீட்டு நடவடிக்கைகள் | | |
|---|---|---|
| | **வழக்குகள்** | **அறிவித்தல்கள்** |
| கைப்பற்றல் அறிவித்தல்கள் வழங்குதல் | 3,608 | 3,663 |
| வழக்கீட்டு நடவடிக்கை | 2,939 | 830 |
| பிற நடவடிக்கை | 7,230 | 4,451 |

## 5.5 மீள் கொடுப்பனவுகள்

குறித்த ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மீள் கொடுப்பனவுகளின் பகுப்பாய்வு (செலுத்த வேண்டியுள்ள வரிகளுக்கெதிராக கொடுப்பனவு செய்யப்பட்ட மீள் கொடுப்பனவுகள் நீங்கலாக) பின்வருமாறு:

**அட்டவணை 28 – மீள் கொடுப்பனவு பகுப்பாய்வு**

| வரி வகை | 2014 | | 2015 | |
|---|---|---|---|---|
| | மீள் கொடுப்பனவு தொகை ரூபா. | ஒவ்வொரு வரி வருமான சேகரிப்பின் தேறிய % | மீள் கொடுப்பனவு தொகை ரூபா. | ஒவ்வொரு வரி வருமான சேகரிப்பின் தேறிய % |
| பெறுமதி சேர் வரி | 1,112,689,379 | 0.47% | 931,478,754 | 0.43% |
| நிறுவன வருமான வரி | 30,901,245 | 0.04% | 18,410,241 | 0.01% |
| பிற நிறுவனமல்லா வருமான வரி | 31,600,314 | 0.39% | 19,715,447 | 0.17% |
| குறிப்பீடு செய்யப்பட்ட கட்டண மீதான நிறுத்திவைத்தல் வரி | 2,275,268 | 1.06% | 7,019,723 | 1.43% |
| வட்டி மீதான நிறுத்திவைத்தல் வரி | 8,214,435 | 0.01% | 757,209 | 0.00% |
| உ.பொ.செ.வரி | 13,934,469 | 0.06% | 25,794,549 | 0.10% |
| **மொத்தம்** | **1,199,615,110** | **0.23%** | **1,003,175,923** | **0.18%** |

குறித்த ஆண்டு காலப்பகுதியில் பெறுமதி சேர் வரி மீள் கொடுப்பனவுகளின் 8927 கோரிக்கைகள் ரூபா 931.48 மில்லியன் மீள் கொடுப்பனவு செய்யப்பட்டதன் மூலம் நிறைவு பெற்றுள்ளன. குறித்த ஆண்டு காலப்பகுதியில் மீள் கொடுப்பனவு செய்யப்பட்ட மொத்த தொகையில் ரூபா 102.31 மில்லியன் பெறுமதியான தொகையானது மொத்த செலுத்த வேண்டியுள்ள தொகைகளுக்கெதிராக மாற்றப்பட்டது அல்லது பதிவளிக்கப்பட்டது.

இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி (இபெசேவ) முறைமையானது, செலவின வவுச்சர்கள் வழங்கும் முறைமைக்கு மாற்றம் செய்வதன் மூலம் ஏற்றுமதிகள் மற்றும் விசேட கருத்திட்டங்களில் ஈடுபடுகின்ற பெறுமதி சேர் வரி பதிவு செய்யப்பட்ட ஆட்களுக்கான பெறுமதி சேர் வரி மீள் கொடுப்பனவுகளை குறைவடையச் செய்கின்றது. ஆணையாளர் நாயகத்தினால் கண்காணிக்கப்படும் இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி முறைமையின் கீழ் அவர்களின் வரி விதிக்கத்தக்க செயற்பாடுகளின் 50% இற்கும் அதிகமான தகைமைவாய்ந்த ஆட்களுக்கு பொருட்கள் அல்லது சேவைகள் வழங்கப்படுமிடத்து, இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி பதிவு செய்யப்பட்ட ஆட்களிடமிருந்து பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு அதிகமான ஆட்கள் தகைமை பெற்றுள்ளனர். எனவே, இத்தகைய விடயங்களில் பெறுமதி சேர் வரி சேகரிக்கப்படத்தக்கதல்ல. ஆனால், முன்னதாக செலுத்தப்பட்ட வரியானது உள்ளீட்டு வரியாக கோரிக்கை விடுக்கப்பட்டது.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரிக்காக 369 ஆட்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

| அட்டவணை 29 – இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி கடன் வவுச்சர் பகுப்பாய்வு | | | | |
|---|---|---|---|---|
| | **2012** | **2013** | **2014** | **2015** |
| மீள் கொடுப்பனவு செய்யப்பட்ட பெறுமதி சேர் வரி தொகை ரூபா. | 3,149,577,623 | 459,692,181 | 1,112,689,379 | 931,478,754 |
| குறித்த ஆண்டின் தேறிய வருமான சேகரிப்பின் % | 1.54% | 0.21% | 0.47% | 0.43% |
| இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி கடன் வவுச்சர் வழங்கப்பட்ட பெறுமதி சேர் வரி பாகத்தின் பெறுமதி ரூபா. (உள்நாட்டு கொள்வனவுடன் தொடர்புடையவை) | 41,991,314,893 | 45,337,507,743 | 47,304,211,325 | 37,458,840,366 |

# அத்தியாயம் 6

# சர்வதேச உறவுகள்

## 6.1 இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் ஒப்பந்தங்கள்

நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் (அல்லது கொடுக்கல் வாங்கல்களில்) சட்டரீதியான இரட்டை வரி விதிப்பு மற்றும் அரசிறை வரி தட்டிக் கழிப்பினை இல்லாமல் செய்வதற்கு அல்லது அவற்றினைக் குறைப்பதற்காக இரட்டை வரி விதிப்பு ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகின்றன. இத்தகைய ஒப்பந்தங்கள் குறிப்பாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் வெளிநாட்டு முதலீடுகள், நிபுணத்துவம், நவீன தொழில்நுட்பம் மற்றும் வேலைவாய்ப்புக்கள் போன்றவற்றினைக் கவரும் பொருட்டு அவை கடன் முகவராண்மையின் மூலம் பாரிய பங்களிப்புக்களை வழங்கி வருவதால் முக்கியத்துவம் பெறுகின்றன.

அத்துடன் ஒப்புரவினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் இரட்டை வரி ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இது போன்ற நாடுகளுக்கிடையிலான ஒத்துழைப்பு இலங்கையின் பல்வேறு ஒப்பந்த பங்காளர்களுடன் ஏற்படுத்தப்பட்டது.

இலங்கையானது 2015.12.31 இலுள்ளவாறு 42 நாடுகளுடன் இரட்டை வரி விதிப்பினைத் தவிர்க்கும் ஒப்பந்தங்களையும் அட்டவணை 30 இல் விதித்துரைக்கப்பட்டவாறான பல்தரப்பு ஒப்பந்தங்களையும் (சார்க்) மேற்கொண்டுள்ளது.

**அட்டவணை 30 - 2015.12.31 இல் வலுவிலுள்ளவாறு இரட்டை வரி விதிப்பு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ள நாடுகள்**

| | நாடுகள் | உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதி | வர்த்தமானி | | வரி மதிப்பீட்டாண்டிலிருந்து இலங்கையில் தொழிற்பாடு |
|---|---|---|---|---|---|
| | | | இலக்கம் | திகதி | |
| 1 | அவுஸ்திரேலியா | 18-12-1989 | 657/2 | 08-04-1991 | 1992/93 |
| 2 | பங்களாதேஷ் | 24-07-1986 | 448/13 | 07-04-1987 | 1989/90 |
| 3 | பெல்ஜியம் | 03-02-1983 | 292/6 | 09-04-1984 | 1984/85 |
| 4 | கனடா | 23-06-1982 | 253/8 | 13-07-1983 | 1986/87 |
| 5 | சீனா | 11-08-2003 | 1374/20 | 06-01-2005 | 2006/07 |
| 6 | டென்மார்க் (Rev.) | 22-12-1981 | 228/15 | 20-01-1983 | 1980/81 |
| 7 | பிரான்ஸ் | 17-09-1981 | 210/17 | 17-09-1982 | 1982/83 |
| 8 | பின்லாந்து | 18-05-1982 | 253/8 | 13-07-1983 | 1981/82 |
| 9 | ஜேர்மனி | 13-09-1979 | 113 | 31-10-1980 | 1982/83 |
| 10 | ஹொங்கொங் (வரையறு..) | 26-03-2004 | 1374/21 | 06-01-2005 | 2005/06 |
| 11 | இந்தியா (Rev.) | 22-01-2013 | 1828/9 | 17-09-2013 | 2014/15 |
| 12 | இந்தோனேசியா | 03-02-1993 | 789/10 | 21-10-1993 | 1995/96 |
| 13 | ஈரான் | 25- 07-2000 | 1187/16 | 06-06-2001 | 2002/03 |
| 14 | இத்தாலி | 28-03-1984 | 322/4 | 05-11-1984 | 1978/79 |
| 15 | ஜப்பான் | 12-12-1967 | 14803/5 | 29-05-1968 | 1969/70 |
| 16 | கொரியா | 28-05-1984 | 342/11 | 29-03-1985 | 1980/81 |
| 17 | குவைற் | 05-02-2002 | 1245/19 | 18-07-2002 | 2002/03 |
| 18 | மலேசியா (Rev.) | 16-09-1997 | 1028/21 | 22-05-1998 | 99/2000 |
| 19 | மொறீசியஸ் | 12-03-1996 | 958/10 | 15-01-1997 | 1998/99 |
| 20 | நேபாளம் | 06-07-1999 | 1116/6 | 26-01-2000 | 2001/02 |
| 21 | நெதர்லாந்து | 17-11-1982 | 281/13 | 26-01-1984 | 1979/80 |
| 22 | நோர்வே(Rev.) | 01-12-1986 | 464/4 | 27-07-1987 | 1989/90 |
| 23 | ஓமான் (வரையறு..) | 26-07-1994 | 881/7 | 26-07-1995 | 1979/80 |
| 24 | பாகிஸ்தான்(Rev.) | 15-10-1981 | 210/17 | 17-09-1982 | 1983/84 |
| 25 | பிலிப்பைன்ஸ் | 11-12-2000 | 1237/7 | 21-05-2002 | 2010/11 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 1256/27 | 02-10-2002 | |
| 26 | போலந்து | 25-04-1980 | 130 | 27-02-1981 | 1984/85 |
| 27 | கட்டார் | 07-11-2004 | 1422/10 | 05-12-2005 | 2008/09 |
| 28 | ருமேனியா | 19-10-1984 | 371/9 | 15-10-1985 | 1986/87 |
| 29 | ரஷ்யா | 02-03-1999 | 1101/22 | 15-10-1999 | 2003/04 |
| 30 | சவூதி அரேபியா (வரையறு) | 16-12-1999 | 1101/23 | 15-10-1999 | 1983/84 |
| 31 | சிங்கப்பூர் | 29-05-1979 | 57/11 | 10-10-1979 | 1977/78 |
| 32 | சுவீடன் | 23-02-1983 | 297/28 | 18-05-1984 | 1985/86 |
| 33 | சுவிற்சலாந்து | 11-01-1983 | 292/6 | 09-04-1984 | 1981/82 |
| 34 | தாய்லாந்து | 14-12-1988 | 571/16 | 18-08-1989 | 1990/91 |
| 35 | ஐ.அ.எ. (வரை.) | 07-07-1992 | 824/13 | 23-06-1994 | 1979/80 |
| | ஐ.அ.எ. (விரிவான) | 24-09-2003 | 1346/1 | 21-06-2004 | 2004/05 |
| 36 | ஐக்கிய இராச்சியம் | 21-06 -1979 | 60/23 | 02-11-1979 | 1977/78 |
| 37 | ஐக்கிய அமெரிக்கா | 14-03-1985 | 398/4 | 22-04-1986 | 2004/05 |
| | ஐக்கிய அமெரிக்கா | 20-09-2002 | 1298/8 | 21-07-2003 | |
| 38 | வியட்னாம் | 26-10-2005 | 1455/9 | 24-07-2006 | 2007/08 |
| 39 | சீசெல்ஸ் | 23-09-2011 | 1837/14 | 20-11-2013 | 2015/16 |
| 40 | பெலாருஸ் | 26-08-2013 | 1837/13 | 20-11-2013 | 2015/16 |
| 41 | பெலஸ்தீன் | 16-04-2012 | 1838/8 | 26-11-2013 | 2015/16 |
| 42 | லக்ஸம்பேர்க் | 31-01-2013 | 1838/9 | 26-11-2013 | 2015/16 |
| **பல்தேசிய ஒப்பந்தங்கள்** | | | | | |
| 1 | சார்க் பல்தரப்பு ஒப்பந்தம் | 13-10-2005 | 1447/3 | 29-05-2006 | 2011/2012 |

### 6.1.1 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இரட்டை வரி விதிப்பு ஒப்பந்தங்கள் தொடர்பிலான விடயங்கள்

**<u>போலந்துடனான மீளாய்வு செய்யப்பட்ட உடன்படிக்கை</u>**

பேச்சுவார்த்தைகள் 2013 டிசம்பர் 02 – 06 வரையிலான காலப்பகுதியில் போலந்து, வர்சோவில் நடாத்தப்பட்டதுடன், உடன்படிக்கையின் வரைபானது, அதிகார மட்டத்தில் கையெழுத்திடப்பட்டு இறுதி வடிவம் பெற்றது. இதற்கான அமைச்சரவை அங்கீகாரமானது 2014 ஜூன் 05 இல் பெறப்பட்டதுடன், 2015 ஒக்டோபர் 06 ஆம் திகதியன்று அரசாங்க மட்டத்தில் கைச்சாத்திடப்பட்டு பாராளுமன்ற அங்கீகாரத்தினைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## 6.2 வெளிநாடுகளில் நடாத்தப்பட்ட சர்வதேச வரி விதிப்பு தொடர்பான விடயங்களில் பங்குபற்றுதல்கள்

| அட்டவணை 31 - வெளிநாடுகளில் நடாத்தப்பட்ட சர்வதேச வரி விதிப்பு தொடர்பான விடயங்களில் பங்குபற்றுதல்கள் | | | | |
|---|---|---|---|---|
| | **அலுவலரின் பெயரும் பதவிப் பெயரும்** | **நிகழ்ச்சித்திட்டம்** | **நாடு** | **காலப்பகுதி** |
| 1 | திருமதி.கே.தஹநாயக்க<br>ஆணையாளர் நாயகம் | வரி விடயங்களில் இரட்டை வரி விதிப்பினைத் தவிர்த்தல் மற்றும் நிருவாக உதவுகை என்பவற்றின் மீதான 4 ஆவது சார்க் தகுதிவாய்ந்த அதிகாரிகளின் கூட்டம் | இந்தியா | 23.04.2015-24.04.2015 |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | திரு. ஏ.ஏ.டி.யு.அபேசிங்க பிரதி ஆணையாளர் நாயகம் | வரி விடயங்களில் இரட்டை வரி விதிப்பினைத் தவிர்த்தல் மற்றும் நிருவாக உதவுகை என்பவற்றின் மீதான 4 ஆவது சார்க் தகுதிவாய்ந்த அதிகாரிகளின் கூட்டம் | இந்தியா | 23.04.2015-24.04.2015 |
| 3 | திருமதி.கே.எஸ்.பீ.ஆர்.டி.எஸ். கருணாரத்ன சிரேஷ்ட ஆணையாளர் | BEPS கருத்திட்டம் மீதான ஆசிய பசுபிக் பிராந்திய வலையமைப்புக் கூட்டம் | கொரியா | 11.02.2015-15.02.2015 |
| 4 | திருமதி.பீ.ஏ.டி.டி.ஹேரத் சிரேஷ்ட ஆணையாளர் | BEPS கருத்திட்டம் மீதான ஆசிய பசுபிக் பிராந்திய வலையமைப்புக் கூட்டம் | கொரியா | 11.02.2015-15.02.2015 |
| 5 | திரு.ரி.எம்.தயானந்த சிரேஷ்ட ஆணையாளர் | BEPS மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மீதான அபிருத்திக் கட்டம் மற்றும் ஒப்படைப்பு விலையிடல் மற்றும் OECD வேலைப்படை மீதான உலகளாவிய மாநாட்டின் வருடாந்த கட்டம் | பிரான்ஸ் | 15.03.2015-21.03.2015 |
| 6 | திரு.பி.எம்.திசாநாயக்க சிரேஷ்ட ஆணையாளர் | வரி விடயங்களில் இரட்டை வரி விதிப்பினைத் தவிர்த்தல் மற்றும் நிருவாக உதவுகை என்பவற்றின் மீதான 4 ஆவது சார்க் தகுதிவாய்ந்த அதிகாரிகளின் கூட்டம் | இந்தியா | 23.04.2015-24.04.2015 |
| 7 | திரு.பி.எல்.எஸ்.லியனகே சிரேஷ்ட ஆணையாளர் | BEPS மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மீதான அபிருத்திக் கட்டம் மற்றும் ஒப்படைப்பு விலையிடல் மற்றும் OECD வேலைப்படை மீதான உலகளாவிய மாநாட்டின் வருடாந்த கட்டம் | பிரான்ஸ் | 15.03.2015-21.03.2015 |
| 8 | திரு.ஜே.ரத்னாயக்க சிரேஷ்ட ஆணையாளர் | BEPS மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மீதான அபிருத்திக் கட்டம் மற்றும் ஒப்படைப்பு விலையிடல் மற்றும் OECD வேலைப்படை மீதான உலகளாவிய மாநாட்டின் வருடாந்த கட்டம் | பிரான்ஸ் | 15.03.2015-21.03.2015 |
| 9 | திரு.ஜே.ஏ.ஏ.பராக்கிரம சிரேஷ்ட ஆணையாளர் | வரி விடயங்களில் இரட்டை வரி விதிப்பினைத் தவிர்த்தல் மற்றும் நிருவாக உதவுகை என்பவற்றின் மீதான 4 ஆவது சார்க் தகுதிவாய்ந்த அதிகாரிகளின் கூட்டம் | இந்தியா | 23.04.2015-24.04.2015 |
| 10 | திரு.ஈ.எஸ்.டி சொஸ்சா சிரேஷ்ட ஆணையாளர் | BEPS மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மீதான அபிருத்திக் கட்டம் மற்றும் ஒப்படைப்பு விலையிடல் மற்றும் OECD வேலைப்படை மீதான உலகளாவிய மாநாட்டின் வருடாந்த கட்டம் | பிரான்ஸ் | 15.03.2015-21.03.2015 |
| 11 | திரு.எச்.எம்.டப்.சி.பண்டார சிரேஷ்ட ஆணையாளர் | BEPS மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மீதான அபிருத்திக் கட்டம் மற்றும் ஒப்படைப்பு விலையிடல் மற்றும் OECD வேலைப்படை மீதான உலகளாவிய மாநாட்டின் வருடாந்த கட்டம் | பிரான்ஸ் | 15.03.2015-21.03.2015 |
| 12 | திரு.டி.ஆர்.எஸ்.ஹபுஆரச்சி ஆணையாளர் | BEPS கருத்திட்டம் மீதான ஆசிய பசுபிக் பிராந்திய வலையமைப்புக் கூட்டம் | கொரியா | 11.02.2015-15.02.2015 |
| 13 | திரு.டி.ஆர்.எஸ்.ஹபுஆரச்சி ஆணையாளர் | LHDNM- OECD ஒப்படைப்பு விலையிடல் பிணக்குத் தீர்வும் தவிர்ப்பும் | மலேசியா | 26.07.2015-01.08.2015 |
| 14 | திரு.எம்.எச்.டென்சில் ஆணையாளர் | BEPS மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மீதான அபிருத்திக் கட்டம் மற்றும் ஒப்படைப்பு விலையிடல் மற்றும் OECD வேலைப்படை மீதான உலகளாவிய மாநாட்டின் வருடாந்த கட்டம் | பிரான்ஸ் | 15.03.2015-21.03.2015 |

| | | | | |
|---|---|---|---|---|
| 15 | திரு.யு.பீ.வக்கும்புர<br>ஆணையாளர் | BEPS மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் மீதான அபிருத்திக் கட்டம் மற்றும் ஒப்படைப்பு விலையிடல் மற்றும் OECD வேலைப்படை மீதான உலகளாவிய மாநாட்டின் வருடாந்த கட்டம் | பிரான்ஸ் | 15.03.2015-<br>21.03.2015 |
| 16 | திருமதி.டி.எம்.பி.கணேபொல<br>ஆணையாளர் | OECD : 20 ஆவது வருடாந்த வரி மாநாட்டுக் கூட்டம் | பிரான்ஸ் | 02.11.2015-<br>04.11.2015 |
| 17 | திரு.எம்.எல்.எம்.தாஹிர்<br>ஆணையாளர் | OECD : 20 ஆவது வருடாந்த வரி மாநாட்டுக் கூட்டம் | பிரான்ஸ் | 02.11.2015-<br>04.11.2015 |
| 18 | திரு.ரி.எம்.ஜே.என்.பண்டார<br>ஆணையாளர் | LHDNM - OECD : சர்வதேச வரி தவிர்ப்பும் BEPS குறைப்பும் | மலேசியா | 19.04.2015-<br>25.04.2015 |
| 19 | திருமதி.கே.ஜே.எஸ்.ரஜினி<br>ஆணையாளர் | வரி விடயங்களில் இரட்டை வரி விதிப்பினைத் தவிர்த்தல் மற்றும் நிருவாக உதவுகை என்பவற்றின் மீதான 4 ஆவது சார்க் தகுதிவாய்ந்த அதிகாரிகளின் கூட்டம் | இந்தியா | 23.04.2015-<br>24.04.2015 |
| 20 | திருமதி.பீ.அத்துகோரல<br>ஆணையாளர் | LHDNM - OECD : BEPS வரி ஒப்பந்தம் தொடர்பான பிணக்குகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பான வரி ஒப்பந்த கருத்தரங்கு | மலேசியா | 15.03.2015-<br>21.03.2015 |
| 21 | திருமதி.டி.ஆர்.கே.பன்னிலவிதான<br>ஆணையாளர் | LHDNM - OECD : BEPS வரி ஒப்பந்தம் தொடர்பான பிணக்குகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பான வரி ஒப்பந்த கருத்தரங்கு | மலேசியா | 15.03.2015-<br>21.03.2015 |
| 22 | திருமதி.டப்.பி.சி.எஸ்.ரணவீர<br>ஆணையாளர் | வரி விடயங்களில் இரட்டை வரி விதிப்பினைத் தவிர்த்தல் மற்றும் நிருவாக உதவுகை என்பவற்றின் மீதான 4 ஆவது சார்க் தகுதிவாய்ந்த அதிகாரிகளின் கூட்டம் | இந்தியா | 23.04.2015-<br>24.04.2015 |
| 23 | திருமதி.ஆர்.பி.எச்.பெர்னாண்டோ<br>ஆணையாளர் | BEPS கருத்திட்டம் மீதான ஆசிய பசுபிக் பிராந்திய வலையமைப்புக் கூட்டம் | கொரியா | 11.02.2015-<br>15.02.2015 |
| 24 | திருமதி.ஆர்.பி.எச்.பெர்னாண்டோ<br>ஆணையாளர் | LHDNM- OECD ஒப்படைப்பு விலையிடல் பிணக்குத் தீர்வும் தவிர்ப்பும் | மலேசியா | 26.07.2015-<br>01.08.2015 |
| 25 | திரு.டி..ஜே.ஜயதிலக<br>பிரதி ஆணையாளர் | LHDNM - OECD : சர்வதேச வரி தவிர்ப்பும் BEPS குறைப்பும் | மலேசியா | 19.04.2015-<br>25.04.2015 |
| 26 | திரு.ஏ.எம்.நபீல்<br>பிரதி ஆணையாளர் | சர்வதேச வர்த்தக கொடுக்கல் வாங்கல் மீதான செயலமர்வு | மலேசியா | 10.05.2015-<br>30.05.2015 |
| 27 | திரு.எம்.எச்.டி..மினெரிபிட்டிய<br>உதவி ஆணையாளர் | சர்வதேச வர்த்தக கொடுக்கல் வாங்கல் மீதான செயலமர்வு | மலேசியா | 10.05.2015-<br>30.05.2015 |
| 28 | செல்வி.பி.ஏ.டி.ஏ.சி.பொன்வீர<br>உதவி ஆணையாளர் | சர்வதேச வர்த்தக கொடுக்கல் வாங்கல் மீதான செயலமர்வு | மலேசியா | 10.05.2015-<br>30.05.2015 |
| 29 | செல்வி.எம்.சி.குணதிலக<br>உதவி ஆணையாளர் | சர்வதேச வர்த்தக கொடுக்கல் வாங்கல் மீதான செயலமர்வு | மலேசியா | 10.05.2015-<br>30.05.2015 |

# அத்தியாயம் 7

## சட்டவாக்கம்

## 7.1 குறித்த ஆண்டு காலப்பகுதியில் சட்டமாக்கப்பட்ட சட்டவாக்கம்

i. 2015 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்த) சட்டம்

ii. 2015 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண (திருத்த) சட்டம்

iii. 2015 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்த) சட்டம்

iv. 2015 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தேசக் கட்டுமான வரி (திருத்த) சட்டம்

v. 2015 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவு (திருத்த) சட்டம்

## 7.2 அங்கீகரிக்கப்பட்ட தரும தாபனங்கள்

குறித்த ஆண்டு காலப்பகுதியில் ஒரேயொரு அங்கீகாரம் மட்டும் வழங்கப்பட்டது.

| தர்ம நிறுவனங்கள் | ஆஷ் ஷிபா |
|---|---|
| முகவரி | 242, கொலன்னாவை வீதி, வெல்லம்பிட்டி |
| வர்த்தமானி இலக்கம் | 1907/18 |
| பதிவு செய்த திகதி | 2015.03.25 |

## 7.3 வர்த்தமானி அறிவித்தல்கள்

திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் உரிய சட்டங்களின் கீழ் குறித்த ஆண்டு காலப்பகுதியில் பின்வரும் வர்த்தமானி அறிவித்தல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 32 – 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்கள்**

| | வர்த்தமானி இல. | திகதி | விவரணம் |
|---|---|---|---|
| I | 1907/26 | 2015.03.25 | இணைந்த வியாபாரங்களுடனான கொடுக்கல் வாங்கல்கல் தொடர்பில் பிரிவு 107(2)(அ) இன் கீழ் அங்கீகரிக்கப்பட்ட கணக்காளர்களின் சான்றிதழ் |
| II | 1910/02 | 2015.04.16 | இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி (SVAT) திட்டத்தின் தொழிற்பாடு |
| III | 1933/14 | 2015.09.21 | 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட) ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ், 2016.10.05 ஆந் திகதிய 1465/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் அட்டவணையிலுள்ள 7 ஆம் இலக்க விடயத்தினைத் திருத்துதல் |

## 7.4 உரைபெயர்ப்புக் குழு

வரிச் சட்ட விதிகள் தொடர்பான உரைபெயர்ப்புக் குழுவானது உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் நிருவகிக்கப்படும் சட்டங்களின் ஏற்பாடுகள் தொடர்பான உரைபெயர்ப்புக்கள், விளக்கமளிப்புக்கள், வழிகாட்டுதல்கள் போன்றவற்றின் வழங்குகைகளுக்கு பொறுப்பு வகிக்கின்ற சிரேஷ்ட பிரதி ஆணையாளர் நாயகத்தின் தலைமையில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர்களைக் கொண்டதாக உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரிவு 208அ இன் கீழ் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் 2011 இல் நியமிக்கப்பட்டது.

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் அனைத்து சட்டவாக்கங்களின் ஏதேனும் ஏற்பாட்டில் ஒன்றிற்கு மேற்பட்ட பொருளினைக் காணுமிடத்து, இக்குழுவிடம் (குழு செயலாளர், செயலகம், உள்நாட்டு இறைவரி திணைக்களம்) அது தொடர்பான உரைபெயர்ப்பினைக் கோரலாம். வரிச் சட்ட விதிகளுக்கான உரைபெயர்ப்புக் குழுவானது, குறித்த ஆண்டு காலப்பகுதியில் கையாண்ட 38 வழக்குகள் தொடர்பான உரைபெயர்ப்புக்கள் மற்றும் நடைமுறைகள் தொடர்பில் ஒத்திசைவான உறுதிப்படுத்துகைக்கு தேவையான வழிகாட்டுதல்கள் மற்றும் அறிவுறுத்தல்களை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. அட்டவணை 33 ஆனது வரிச் சட்ட விதிகள் தொடர்பான உரைபெயர்ப்புக் குழுவினால் வழங்கப்பட்ட உரைபெயர்ப்புக்களின் விபரத்தினைக் காட்டுகின்றது.

**அட்டவணை 33 – 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வரிச் சட்ட விதிகள் தொடர்பான உரைபெயர்ப்புக் குழுவினால் வழங்கப்பட்ட உரைபெயர்ப்புக்களின் விபரம்**

| வரி வகை | வருமான வரி | பெ.சேர் வரி | தே.க.வரி | முத்திரை தீர்வை | பொ.சே.க. | காணி வரி | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| வருமான வரியின் பொறுப்புடைமை | 1 | 4 | 1 | | 1 | 1 | 8 |
| பங்கிலாபங்கள் | 2 | | | | | | 2 |
| விலக்களிப்புக்கள் | 2 | 2 | 1 | | | | 5 |
| இலாபங்கள் மற்றும் வருமானத்தினைக் கணிப்பீடு செய்வதில் அனுமதிக்கப்பட்ட கழிப்பனவுகள் | 3 | | | | | | 3 |
| ஊழிய வருமானம் | 5 | | | | | | 5 |
| தகைமைவாய்ந்த கொடுப்பனவுகள் | 3 | | | | | | 3 |
| வரைவிலக்கணம் | 4 | | 2 | 1 | | | 7 |
| புரள்வுப் பொறுப்பின் கணிப்பீடு | | | | | 1 | | 1 |
| நடைமுறைகள் | | 1 | | | | | 1 |
| ஏனையவை | 2 | | | | 1 | | 3 |
| **மொத்தம்** | **22** | **7** | **4** | **1** | **3** | **1** | **38** |

# அத்தியாயம் 8

# ஏனைய பணிகள்

## 8.1 வரி செலுத்துனர் சேவைப் பிரிவு

வரி செலுத்துனர் சேவைப் பிரிவானது, திணைக்களத்தின் கோவையானது பொதுமக்களுக்கும் வரி செலுத்துனருக்கும் சௌகரியமான முறையில் கிடைக்கச் செய்வதற்கான வசதிப்படுத்தல்களினை வழங்கி வருகின்றது. இப்பிரிவானது உதவியினை அல்லது தகவலினைக் கோருகின்ற ஒவ்வொரு ஆளுக்கும் உதவியளிப்பதற்கான அலுவலர்களைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. உரிய சட்டவாக்கங்கள், திணைக்கள வெளியீடுகள், கொடுப்பனவு துண்டுகள், படிவங்கள் போன்றன இப்பிரிவில் கிடைக்கக் கூடியதாகவுள்ளன. வரி செலுத்துனர் அடையாள இலக்கங்கள் (TIN) மற்றும் தற்காலிக பெறுமதி சேர் வரி இலக்கங்களை வழங்குவதில் ஏற்படும் தாமதங்கள் மற்றும் அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கைகள் இப்பிரிவில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கிணங்க, குறித்த ஆண்டு காலப்பகுதியில் அலகானது 6,959 வரி செலுத்துனர் அடையாள இலக்க சான்றிதழ்களையும் 29,034 தற்காலிக சான்றிதழ்களையும் வழங்கியுள்ளது. 3,523 தற்காலிக பெறுமதி சேர் வரி விண்ணப்பங்கள் குறித்த அலகினால் புதிய கோவைகளைத் திறப்பதற்காக தகவல் கிளைக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன், 4,034 வரி செலுத்துனர் அடையாள இலக்க விண்ணப்பங்கள் கோவைகளின் முறையான பேணலுக்காக நிறுவன அலகுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும், குறித்த ஆண்டு காலப்பகுதியில் 396 விடுவிப்புச் சான்றிதழ்கள் வரி செலுத்தாதோருக்காக வழங்கப்பட்டுள்ளதுடன், வரி செலுத்துனர்களுக்கு நன்மையளிப்பதற்காக பல்வேறு வகையான துண்டுப் பிரசுரங்களும் தயாரிக்கப்பட்டன. இதற்கும் மேலாக, திணைக்களத்தின் வரி செலுத்துனர் பிரிவு வரி செலுத்துனர்களுக்கு வரி ஆலோசனைகளையும் வழங்கியுள்ளதுடன், குறித்த ஆண்டு காலப்பகுதியில் 11 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## 8.2 திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பணிப்புரைகள் மற்றும் இசைவாணைச் சான்றிதழ்கள்

**அட்டவணை 34 – திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளும் இசைவாணைச் சான்றிதழ்களும்**

| விபரணம் | 2015 | 2014 |
|---|---|---|
| ***வழங்கப்பட்ட பணிப்புரைகள்*** | | |
| • வட்டி மீதான நிறுத்தி வைத்தல் வரிக்காக வங்கிகளுக்கு | 144 | 272 |
| ***வழங்கப்பட்ட விடுவிப்புச் சான்றிதழ்கள்*** | | |
| • நாட்டினை விட்டு செல்பவர்களுடன் தொடர்புடையவை | 396 | 321 |
| ***வழங்கப்பட்ட சிறப்புரிமை அட்டைகள்*** | | |
| • தங்க அட்டைகள் | 411 | 102 |
| • வெள்ளி அட்டைகள் | 234 | 68 |
| ***மோட்டார் கார்களின் இறக்குமதிகள் மீதான வரிச் சலுகைகளுக்காக வழங்கப்பட்ட சான்றிதழ்*** | | |
| • வழங்கப்பட்ட சான்றிதழ்களின் எண்ணிக்கை | 299 | 166 |

## 8.3 ஒப்படைப்பு விலையிடல் ஒழுங்கமைப்பு அலகு

ஒப்படைப்பு விலையிடல் ஒழுங்கமைப்பு அலகானது கட்டுப்பாடற்ற நிபந்தனை கோட்பாட்டுக்கு இணங்கிய வகையில் இணைந்த தொழில் முயற்சிகளுக்கிடையிலான கொடுக்கல்களை உறுதிப்படுத்துவதற்கும் ஒப்படைப்பு விலையிடல் ஒழுங்குவிதிகளினை அமுலாக்குதல் மற்றும் நிருவகித்தலுக்காக 2013 இல் தாபிக்கப்பட்டது.

குறித்த ஆண்டு காலப்பகுதியில் ஒப்படைப்பு விலையிடல் ஒழுங்குவிதி அலகானது ஒப்படைப்பு விலையிடல் முறைகள் தொடர்பான அறிவினை மேம்படுத்துதல் மற்றும் பூகோள ஒப்படைப்பு விலையிடல் பிரச்சினைகளினைப் புரிந்து கொள்ளுவதற்கான அறிவினைப் பெறுதல் எனும் நோக்கங்களுக்காக திணைக்களத்தின் பல்வேறுபட்ட அலகுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட அலுவலர்களின் குழுவொன்றுக்கான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனத்திடமிருந்தான உதவுகையுடன் 3 வதிவிட செயலமர்வுகளை ஏற்பாடு செய்துள்ளது.

ஒப்படைப்பு விலையிடல் ஒழுங்குவிதியின் அலுவலர்கள் திணைக்களத்தின் பல்வேறுபட்ட அலகுகளிலிருந்து பெறப்பட்ட 25 விடயங்களுக்கான கட்டுப்பாடற்ற நிபந்தனை விலையினைத் தீர்மானிப்பதனை பூர்த்தி செய்துள்ளார்கள்.

## 8.4 பயிற்சியளித்தல் கிளை

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் பயிற்சியளித்தல் கிளையானது, திணைக்கள உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்படும் வழமையான பயிற்சியளித்தல் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக குறித்த ஆண்டு காலப்பகுதியில் வரி செலுத்துனர்களுக்கான பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை ஏற்பாடு செய்துள்ளது.

**அட்டவணை 35 – விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் விபரங்கள்**

| விடயம் | நிறுவகம் | பங்கு பற்றிய ஆட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| திணைக்களத் தலைவர்கள் மற்றும் கணக்காளர்களுக்கான வரி விதிப்பு தொடர்பான செயலமர்வு | சப்ரகமுவ மாகாண சபை | 60 |
| திணைக்களத் தலைவர்கள் மாவட்டப் பொறியியலாளர்கள், உதவிப் பணிப்பாளர்கள் மற்றும் கணக்காளர்களுக்கான வரி விதிப்பு தொடர்பான செயலமர்வு | மாவட்டச் செயலகம் - மாத்தளை | 65 |
| மாணவர்களுக்கான வரி விதிப்பு தொடர்பான கருத்தரங்கு | வயம்ப பல்கலைக்கழகம் | 140 |

# அத்தியாயம் 9

# இறைவரி நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS)

திணைக்களத்தின் வினைத்திறனை மேம்படுத்தும் நோக்கில் அரசிறை முகாமைத்துவ மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததும் இன்றியமையாததுமான இறைவரி நிருவாக முகாமைத்துவ தகவல் முறைமை (RAMIS) அமுல்படுத்துமாறு நிதி திட்டமிடல் அமைச்சு கோரியுள்ளதுடன், 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் (RAMIS) கருத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

(RAMIS) கருத்திட்டமானது வரி இணக்கப்பாட்டுக்கான ஆதரவினை அதிகரிப்பதனூடாக மிகவும் வினைத்திறன்வாய்ந்ததும் பயனுறுதிவாய்ந்ததுமான முறையில் வரி செலுத்துனர்களிடமிருந்து இறைவரி வருமானத்தினை சேகரிப்பதனை நோக்காகக் கொண்டுள்ளது. இது வரி வலையமைப்பினை விரிவாக்குவதனையும், இணக்கப்பாட்டினை அதிகரிப்பதனையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

நிதி திட்டமிடல் அமைச்சானது (RAMIS) இனை அமுல்படுத்துவதற்கு உதவியினை சிங்கப்பூரிலிருந்து பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தினை 2012 நவம்பரில் பெற்றிருந்தது. இந்த நோக்கத்திற்காக நிதி திட்டமிடல் அமைச்சுக்கும் சிங்கப்பூரின் சர்வதேச தகவல் விருத்தி அதிகாரசபைக்குமிடையில் 2013 ஜூன் 05 ஆம் திகதியன்று புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது.

அமைச்சரவையினால் பேச்சுவார்த்தை நோக்கங்களுக்காக குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதாவது அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு அமைச்சரினால் நியமிக்கப்பட்டது. IDA-1 இனால் சமர்ப்பிக்கப்பட்ட வரைபு முன்மொழிவானது தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டது.

2013 நவம்பரில் உள்நாட்டு இறைவரி திணைக்களம் மற்றும் நாணய முகாமைத்துவ வினைத்திறன் நிகழ்ச்சித்திட்டத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் கொண்ட குழுவானது சிங்கப்பூருக்கு விஜயம் செய்ததுடன், IDA -1 சிங்கப்பூர், NCSI – S – சிங்கப்பூர் மற்றும் சிங்கப்பூர் உள்நாட்டு இறைவரி அதிகாரசபை ஆகியவற்றுடன் உயர்மட்ட பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டது. அக்குழுவானது சிங்கப்பூர் உள்நாட்டு இறைவரி அதிகாரசபையின் வரிச் சேவை அலகுக்கும் விஜயம் செய்தது. குழுவினால் தயாரிக்கப்பட்ட பூர்வாங்க அறிக்கையானது அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழுவானது IDA -1 அதிகாரிகளுடன் முன்மொழிவு வரைபின் அடிப்படையில் கொழும்பில் பேச்சுவார்த்தைகளை நடாத்தியுள்ளதுடன், ஒப்பந்தப் பெறுமதி மற்றும் பொதுவான நிபந்தனைகள் குறித்தும் உடன்பாடு காணப்பட்டது. அதற்கிணங்க, (RAMIS) அமுலாக்கல் ஒப்பந்த உடன்படிக்கையானது 2014 மே மாதத்தில் IDA -1 இற்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டது.

அமுல்படுத்தப்படவுள்ள (RAMIS) கருத்திட்டமானது இரண்டு கட்டங்களைக் கொண்டுள்ளது. முதலாம் கட்டமானது நிறுவன வருமான வரி (CIT) பெசேவ, இபெசேவ, தேகவ, நிவைவ மற்றும் உபொசெவ என்பவற்றினைக் கொண்டுள்ளது. இரண்டாம் கட்டமானது தனிநபர், பங்குடமைகள், சங்கங்கள் போன்ற நிறுவனமல்லா வருமான வரிகளையும், முத்திரைத் தீர்வை, பொருளாதார சேவைக் கட்டணம் (ESC), பந்தய மற்றும் சூதாட்ட விதிப்பனவு (B&G) மற்றும் நிதிச் சேவைகள் மீதான பெறுமதி சேர் வரி என்பவற்றினையும் கொண்டுள்ளது. இக்கருத்திட்டமானது 2014 ஜூலையில் ஆரம்பிக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பூர்வாங்க அறிக்கையானது தயாரிக்கப்பட்டதுடன், முதலாம் கட்டத்திற்கான தேவைப்பாடுகளைச் சேகரித்தல், செல்லுபடிக்காலம் மற்றும் வியாபார செயல்முறையினை மீள் நெறிப்படுத்துதல் என்பனவும் பூர்த்தி செய்யப்பட்டன. அதற்கிணங்க, வரி செலுத்துனர்களைப் பதிவு செய்தல், படிவங்கள் மற்றும் விபரத்திரட்டுக்கள், மதிப்பீடுகள் (தேகவ மற்றும் இபெசேவ), விடுவிப்புச் சான்றிதழ்கள், மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகள், கொடுப்பனவுகள், மீளளிப்புக்கள் போன்ற

தொழிற்பாடுகளின் தேவைப்பாடுகள் இறுதி வடிவத்தினைப் பெற்றன.

2015 ஆம் ஆண்டில் மதிப்பீடுகள் (நிறுவன வருமான வரி), பெறுமதி சேர் வரி, நிறுத்தி வைத்தல் வரி மற்றும் வரி செலுத்துனர் நிதி என்பவற்றிற்கான தேவைப்பாடுகள் இறுதி வடிவம் பெற்றன. உள்நாட்டு இறைவரி இணைய நுழைவாயிலானது 2015 மே 30 ஆம் திகதியன்று 3 மொழிகளிலும் வெளியீடு செய்யப்பட்டதுடன், 2015 யூன் 3 ஆம் திகதியன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. NCSI – S இனால் அபிவிருத்தி மற்றும் முறைமை நெறிப்படுத்தும் சோதனையானது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், பயன்படுத்துனரின் ஏற்றல் சோதனையானது உள்நாட்டு இறைவரி திணைக்கள உத்தியோகத்தர்களினால் 2015 ஆகஸ்டில் ஆரம்பிக்கப்பட்டது. மேலும், 2 ஆம் கட்ட வரி வகைகளுக்கான தேவைப்பாடுகளைப் பெறுதல் மற்றும் BPR என்பன 2015 ஒக்டோபரில் ஆரம்பிக்கப்பட்டன.